# நீ இன்றி நான் ஏது ?

ராஜேஷ்குமார்



MITHRAVINTHA

## உள்ளே...


| | |
|---|---|
| நீ இன்றி நான் ஏது? | 5 |
| ஜன்னல் நிலா | 118 |


PUD

# நீ இன்றி நான் ஏது?

## 1

ஃப்ளாஷ் லைட்கள் வட்டமாய்க் குவிந்திருந்த இடத்தில் பளபளப்பாக ஒரு சைக்கிள் நின்றிருக்க—சைக்கிள் சீட்டின் மேல் முழங்கையை ஊன்றிக் கொண்டு ஸ்நேகமாய்ப் புன்னகைத்தாள் சுபமதி.

விளம்பரப் பட இயக்குநர் காமிராமேனை விலகிக் கொள்ளச் சொல்லிவிட்டு—லென்ஸின் வழியே ஷாட் சரியாக இருக்கிறதா என்று ஆராய்ந்தார்.

ஓரிரு அஸிஸ்டெண்ட்கள் பம்பரமாய் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

சைக்கிள் கம்பெனி சார்பாக மார்க்கெட்டிங் மேனேஜரும், எம். டி. சேதுவும் ஓரமாக மடக்கு நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தார்கள்.

இயக்குநர் லென்ஸை விட்டுத் தலையை எடுக்காமலே கேட்டார்.

MITHRAVINTHA

"காமிராமேன்..."

"சொல்லுங்க ஸார்..."

"சைக்கிள் விளம்பரத்துக்காக நாம படம் எடுக்கறோம்...சுமதியின் மேல் போகஸ் ஆகியிருக்கிற ஷாட்டுக்களை கொஞ்சம் குறைச்சிட்டு...சைக்கிளின் ஸ்போக்ஸ் கம்பிகளும், ஹேண்டில்பாரும் மின்னற மாதிரி ஷாட்டுக்களை மாத்திக்கலாமே...?"

"ரெண்டாவது ஷாட்டுக்கு நீங்க சொல்ற மாதிரி ஷாட்டுக்களை மாத்திக்கலாம் ஸார்...அழகான பொம்பளை சொன்னாத்தான் ப்ராடக்ட்டையே திரும்பிப் பார்க்கிறாங்க...அதனால இந்த ஷாட்டில் சுமதியை ஃபோகஸ் பண்ணுவோம்...மை பெஸ்ட் ஃப்ரெண்ட்...நாள் தோறும் அப்படின்னு ரைட்டர் எழுதிக் கொடுத்த டயலாக்கை சுமதி பேசற மாதிரி எடுத்துடுவோம்... அதுக்கப்புறமா சைக்கிளை முன்னிலைப்படுத்திக் காமிக்கலாம்..."

"காமிராமேன் சொல்றதும் சரியாத்தான் இருக்கு டைரக்டர்..." என்றார் சேது. டைரக்டர் புன்னகைத்தார்.

"உங்களுக்கு ஓக்கேன்னா எனக்கும் ஓக்கேதான்...என்னடா இவங்க சுத்திச் சுத்தி பொம்பளையையே படம் பிடிச்சிட்டிருக்காங்கன்னு காசு கொடுத்து படம் எடுக்கிற நீங்க நினைச்சிடக் கூடாது பாருங்க..."

அங்கே சிரிப்பு தவழ்ந்தது.

காமிரா சுழலத் துவங்க—சேது தன் அருகில் நின்றிருந்த அஸிஸ்டெண்ட் டைரக்டரிடம் மெதுவாய்க் கேட்டார்.

"இந்த மாடலிங் பொண்ணு உங்க யூனிட்டைச் சேர்ந்ததா...?"



"இல்லை ஸார்...ப்ரீலான்ஸ்...யார் கூப்பிட்டாலும் போய் மாடலிங் பண்ணிக் குடுக்கும்..."

"ரொம்ப அழகா இருக்காளே...பேர் என்ன...?"

"சுமதி..."

"ஷாட் முடிஞ்ச பிறகு என்னை வந்து பார்க்கச் சொல்லு...நான் தனியா கொஞ்சம் பேசணும்..."

"ஓக்கே ஸார்..."

அடுத்தடுத்த இரண்டு மணிநேரங்கள் சுமதி சம்பந்தப்பட்ட ஷாட்களை எடுத்து முடித்து விட்டு—அதன் பின்பு சைக்கிளை மட்டும் தனியாக க்ளோஸப் செய்கிற காட்சிகளைப் பிடிப்பதில் படப்பிடிப்பு யூனிட் மும்முரமானது.

சேது ஸ்டூடியோவுக்குள் இருந்த மேக்கப் அறை ஒன்றில் உட்கார்ந்து டீயை உறிஞ்சிக் கொண்டிருந்தபோது அறை வாசலில் சுமதியின் இனிப்பான குரல் கேட்டது.

"எக்ஸ்க்யூஸ் மீ ஸார்..."

"உள்ளே வாம்மா..."

டீ கோப்பையை வைத்துவிட்டு நிமிர்ந்து பார்க்க—ஷூட்டிங்கில் நடித்தபோது அணிந்திருந்த மாடர்ன் உடையைக் களைந்து விட்டு—சிந்தெட்டிக் புடவைக்கு மாறியிருந்தாள் சுமதி.

"என்னைப் பார்க்கணும்னு சொன்னீங்களாமே...?"

"ஆமா...உட்காரும்மா..."

அங்கிருந்த ஸ்டூலைக் காட்டினார்.

அதில் அமர்ந்து கொண்டே அவர் சொல்லப்போகும் வார்த்தைகளை எதிர்பார்த்து கேள்விக்குறிப் பார்வையை அவர் மேல் பதிய வைத்திருந்தாள்.

MITHRAVINTHA

"இந்த வருஷத்தின் மாறுபாக்கச்சின் கம்பெனியைத் தவிர இன்னொரு சென்ட்டர் கன்சர்ன் வெச்சிருக்கோம்... ரூம் அட்வெர்டைஸ்மென்ட் எடுக்கிற அளவுக்கு அந்தக் கம்பெனி இன்னும் வளரலை... பேஷ் மாடல் ஷாட்ஸ் மட்டும் எடுத்து பத்திரிகைகளில் விளம்பரம் தரலாம்னு இருக்கோம்... நீ என்ன நினைக்கிறே...?"

"மாடல் போட்டோவுல நான் போஸ் தரணும்னு விரும்பறீங்களா?"

"ஆமா... அதைப்பத்தான் உன்னைக் கூப்பிட்டுப் பேசறோம்மா."

"பொதுவா அட்வெர்டைஸ் ஏஜென்ஸிதான் என்னை புக் பண்ணுவாங்க. ஆனா ஒரு கிளையண்ட்டே நான் மாடலிங் பண்ணணும்னு விரும்பிக் கேக்கறது எனக்கு சந்தோஷமா இருக்கு ஸார். வருஷத்தின் விளம்பரம் எடுத்த இலக்கிட்டேயே அந்தப் பொறுப்பையும் ஒப்படைக்கப் போறீங்களா?"

"இல்லை...இவங்க கிட்டே அந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறதா இருந்தா நான் உன்னைக் கூப்பிட்டுப் பேச வேண்டிய அவசியமே இல்லையே."

"வேற ஏஜென்ஸியா?"

"வேற ஏஜென்ஸிக்காரங்களா இருந்தாலும்... அவங்க கிட்டே உன்னைப்பத்தி சொல்லி... அந்தப் போஸ்ஸை புக் பண்ணி மாடல் எடுத்துக் குடுங்கன்னு அவங்க கிட்டேயே பேசிப்பேனே... அந்த சென்டர் கன்சர்னைப் பொறுத்த வரைக்கும் அட்வெர்டைஸின் செலவைக் குறைக்கிறதுக்காக நாங்களே ஒரு போட்டோகிராபரை நிரந்தரமா வெச்சிருக்கோம்... மத்த நாட்களில் மார்க்கெட்டிங் பிரிவு வேலைகளைப் பார்த்துப்பார்... விளம்பர புகைப் ஓர்க்கையும் அந்த டிபார்ட்மென்டே பண்ணிக் கொடுத்துடுவார்..."



"ஸோ... உங்க கம்பெனி போட்டோ கிராபரே மாடல்ஸ் எடுத்துடுவார்...?"

"ஆமா... உன்னோட டேர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ் என்னன்னு சொல்லிடு..."

"காண்ட்ராக்ட் பேசிண்டுதான் நான் ஒர்க் பண்றேன்... போட்டோ செக்ஷன் எவ்வளவு வெச்சிருக்கலாம்னு நீங்க சொல்லீங்கன்னா அவ்வளவு முழுதான் காண்ட்ராக்ட் உங்களுக்குத் தர்றேன்..."

"உன்னோட நியூரண்ட் அவெய்லபிள் டேட் என்னன்னு சொல்லும்மா..."

"ஒன் மினிட் ஸார்..."

கமலா தன் வானிட்டி பேகின் வாயை நுழைந்து அந்த டிஜிட்டல் டயரியைப் பிரித்தாள்.

ஷெட்யூலை ஆராய்ந்து விட்டு நிமிர்ந்தாள்.

"இன்னும் ரெண்டு மாசத்துக்கு டேட் ஷெட்யூல் ஸார்..."

சேது வருத்தம் தோய்ந்த குரலில் அவளைப் பார்த்துக் கேட்டார்.

"என்னம்மா இப்படிச் சொல்றே...? நான் ஒத்துக்க மாட்டேன்... விளம்பரச் செலவை லோ பட்ஜெட்டுல பண்ண நினைச்சாலும் உனக்குத் தரப்போற அமவுண்டுல நான் கஞ்சத்தனம் காட்டவே மாட்டேன்... நீ என்ன செய்வியோ எனக்குத் தெரியாது... இந்த மாசத்துக்குள்ளே எனக்கு ஒரு டேட் சொல்லு..."

"இதுநாள் வரைக்கும் காண்ட்ராக்ட் விஷயத்தில் யார் கிட்டேயும் நான் அட்ஜஸ்ட்மெண்ட் பண்ணிக்கச் சொல்லி கேட்டுக்கிட்டதில்லை ஸார்..."

MITHRAVINTHA

"கால்ஷீட் மேனேஜ்மெண்ட் நீ பார்த்து பண்றது தானேம்மா. உனக்கு டபுள் பேமெண்ட் தான தர்றேன்... ஒரு நாள் அட்ஜஸ்ட் பண்ணு..."

"ஸாரி ஸார்... ஆனா உங்களுக்காக ஒரே ஒரு தியாகம் செய்யலாம்..."

"என்ன சொல்ற...?"

"வழக்கமா சனி ஞாயிறுகளை மட்டும் நான் என் சொந்த வேலைகளுக்காக ஒதுக்கியிருக்கேன்... அந்த நாட்களில் மாடலிங் பண்றதேயில்லை... வர்ற சனிக்கிழமையை வேணா உங்களுக்காக தியாகம் செய்யலாம்..."

"குட்... அப்போ வர்ற சனிக்கிழமையை எனக்காக ஒதுக்கறதா முடிவு பண்ணிட்டே..."

"எஸ் ஸார்..." என்றவள் ஷெட்யூலில் அதைப் பதிவு செய்து கொண்டே— அவரிடம் கேட்டாள்.

"உங்க பிண்டர் கன்சர்ன் எங்கே ஸார் இருக்கு...?"

"கன்சர்ன் பாடிக்கும் பக்கத்தில் இருக்கு சுமதி... ஆனா நீ போட்டோ செஷனுக்காக இங்கே வர வேண்டியதில்லை."

"வேற எங்கே வரணும் ஸார்?"

"ஹோட்டல் அபிதேந்திரவில் ரூம் புக் பண்ணிடறேன். அந்த ஸ்டார் ஹோட்டலின் லிஃப்ட், மொட்டை மாடி, ஸ்விம்மிங்பூல் இதுமாதிரி நல்ல பேக்கிரவுண்ட்ல லேசர படம் எடுக்கலாம். உனக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்லையே?"

"எங்கே கூப்பிட்டாலும் வந்து மாடலிங் பண்ணத் தயாரா இருக்கேன் ஸார். இல்லைன்னா இந்த காம்ப்பட்டிஷன் உலகத்தில் நான் பின்தங்கிப் போகவேண்டியதாயிடும்."



"குட்..."

பாராட்டியவரிடம் விடைபெற்றுச் சென்றாள் சுமதி.

சேது ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு திரும்பியபோது மார்க்கெட்டிங் மானேஜர் பக்கத்து அறையிலிருந்து வந்தார்.

"அவளை நான் புக் பண்ணிட்டேன் மேனேஜர்."

மேனேஜர் கலக்கமாய் அவரைப் பார்த்தார்.

"ஸார்... ரிஸ்க் எடுக்கறீங்க."

"காசுக்காக ஒத்துழைக்கிற ப்ராஸ்டிட்யூட்ஸ் நரகம் எனக்கு அலுத்துப் போச்சு மேனேஜர். கொஞ்சம் வித்தியாசமா பண்ணிப் பார்க்கலாமேன்னு முடிவு பண்ணிட்டேன்."

"எல்லாம் ஸ்மூத்தா நடக்குமா ஸார்?"

"நடக்கும். காசுக்காக கூப்பிட்ட இடத்துக்கு வர்றவ தானே?" மத்தவங்களுக்குக் காட்சிப் பொருளாகத் துணிஞ்ச இவ கண்ணுல இன்னும் கொஞ்சம் அதிகமா பணத்தைக் காட்டுனா போகப் பொருளாகவும் சம்மதிப்பா."

"ஒருவேளை முரண்டு பிடிச்சா?"

"ஏசி ரூம். சத்தம் வெளியே கேக்காது. ஃபோர்ஸ் பண்ண வேண்டியதுதான். இவ வெளியே போய்க் கூப்பாடு போட்டாலும் என்னோட வயசும், அந்தஸ்தும் எனக்குக் கேடயமா இருக்கும். அதே மாதிரி அவளோட தொழிலும், ஹோட்டலுக்குத் தனியா வர்ற தைரியமும் அவளுக்கு எதிரியா இருக்கும். அவளோட வாய்ஸ் எடுபடாது. பணம் பறிக்கிறதுக்காக பெரியவர் மேல பழியைப் போடறான்னு தான் உலகம் சொல்லும்."

MITHRAVINTHA

"அப்போ ஹோட்டல் அசோகாவில் வரும் சனிக்கிழமைக்கான அறையை புக் பண்ணிடறேன் ஸார்."

பவ்யமாய்ச் சொன்னார் மேனேஜர்.

## 2

சனிக்கிழமை.

ஹோட்டல் அசோகாவின் மேல்தளம் லிப்ட்டில் பயணித்து இரண்டாவது தளத்தை அடைந்த கபாலி— காரிடாரின் மத்தியில் இருந்த அறையின் காலிங்பெல் ஸ்விட்சை அழுத்தினான்.

கதவு திறந்தது.

உள்ளே இருந்த சேது அவனை வரவேற்றார்.

"வாப்பா..."

"குட்மார்னிங் ஸார்..."

கபாலி நுழைந்ததும் கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டே புன்னகைத்தார்.

"குட்மார்னிங்... நீ ரொம்பப் பங்க்சுவல்...சொன்ன டயத்துக்கு டாண்ணு ஆஜராயிட்டே..."

"தாங்க்யூ ஸார்..."

அறையைச் சுற்றிலும் பார்வையை நழுவ விட்ட கபாலி—அங்கே படப்பிடிப்புக்கான எந்த அடையாளங்களுமே இல்லாததைப் பார்த்து லேசாய் மனசுக்குள் திகைப்படைந்தான்.

"ஒரு காமிரா ஸ்டாண்டைக் கூடக் காணோமே...?"



சுற்றும் முற்றும் பார்த்தபடி இருந்த அவனைப் பார்த்து நிதானமான குரலில் கேட்டார்.

"என்னப்பா தேடறே...?"

"காமிராமேன்... அஸிஸ்டெண்ட்ஸ்... இப்படி யாரையுமே காணோமே ஸார்...?"

"காமிராமேனுக்கு இன்னிக்கு உடம்பு சரியில்லாமப் போயிருச்சு கபாலி..."

"ஷூட்டிங்... அதனால இன்னிக்கு போட்டோ செஷன் இல்லையா ஸார்..."

"ஆமாம்பா... நீ இவ்வளவு தூரம் வந்துட்டு ஏமாந்து போயிடக் கூடாதேன்னுதான் உனக்காக நான் காத்திட்டிருந்தேன்..."

"நான்தான் போன் நம்பர் கொடுத்திருந்தேனே! எனக்கு ஒரு போன் பண்ணி சொல்லியிருந்தால் போதுமே..."

"அதுக்காக இல்லை... இவ்வளவு கஷ்டப்பட்டு நீ ஒதுக்கித் தந்த கால்ஷீட் வேஸ்ட் ஆயிடக்கூடாது பாரு..."

"அதனால என்ன ஸார்... என்னோட ஆள் கூட மகாபலிபுரம் போகணும்னு போன் பண்ணியிருந்தேன்... அந்த ப்ரோக்ராமைக் கான்சல் பண்ணிட்டு இங்கே வந்தேன்... இப்ப அவருக்கு போன் அடிச்சு ப்ரோக்ராம் கேன்சல் இல்லை... நான் அவெய்லபிள்னு சொல்லிட்டாப் போச்சு..."

"அவர் கூட போனின்னா உனக்கு சந்தோஷம் மட்டும் தான் கிடைக்கும்... இங்கே இன்னிக்கு கால்ஷீட்டை என்னோட கழிச்சின்னா சந்தோஷத்தோட பணமும் சேர்ந்து கிடைக்குமே..."

கட்டென்று நிமிர்ந்தான் கபாலி.

MITHRAVINTHA

"என்ன வார் உங்க பேச்சு ஒரு மாதிரி இருக்கு...?"

"என்ன மாதிரி இருக்கு..."

"வயசானவர் பேசற மாதிரி இல்லை..."

கடகடவென்று குரல் அதிர—உடம்பைக் குலுக்கிக் கொண்டு சிரித்தார் சேது.

"படுக்கையில் இன்னிக்கு என்கூட விளையாடிப் பாரு சுமதி... அந்த விஷயத்திலும் நான் வயசான ஆள் மாதிரி இருக்க மாட்டேன்..."

"ச்சே...நீயெல்லாம் ஒரு பெரிய மனுஷனா...?"

"ஏய்...காசுக்காக காமிரா முன்னால நிக்கறவதானேடி நீ..."

"இதுவும் ஒரு கவுரவமான தொழில்தான்... காசுக்காக நான் எப்படி வேணா காமிரா முன்னாடி நிக்க மாட்டேன். என்னோட அக்ரிமெண்ட் பார்மைப் படிச்சிப் பார்த்திருந்தா என்னைப் பத்தி உனக்கு நல்லாப் புரிஞ்சிருக்கும்...உடம்பை மறைக்கிற உடைகள் மட்டும்தான் அணிவேன்... பெண்மையை இழிவுபடுத்தற மாதிரி நீச்சல் கொண்ட விளம்பரங்களில் நடிக்க மாட்டேன்...இப்படி வரிசையா ஏழெட்டு கண்டிஷன்கள் போட்டிருப்பேன்... ஒண்ணு தெரிஞ்சிக்கோ... இந்த உலகத்தில் ஆண் ஜாதி பெண் ஜாதியைத் தவிர காசுக்காக என்ன வேணா செய்யத் துணிஞ்ச ஒரு ஜாதி இருக்கு...நான் வேலையான அந்த ஜாதியைச் சேர்ந்தவள் இல்லை... குட் பை..."

வேகமாய்க் கதவை நெருங்கிக் கைப்பிடியை அழுத்தித் திறக்க நினைத்தாள்.

கதவு திறக்க மறுத்தது.

"அது திறக்காது சுமதி...சாவி என்கிட்டே இருக்கிறதால உன்னோட சொன்ன பேச்சை அது கேக்காது...இதே



ஏசி அறை...நீ கத்தினா வெளியே கேக்காது...வயசானவன் இம் மாதிரி பார்க்குற தேக்குமரம் நான். என் கூட உன்னால ரொம்ப நேரம் இந்த அறைக்குள்ளே ஓடிப்பிடிச்சு விளையாட முடியாது...என்னோட ஆண்மைக்கு உன்னோட பெண்மை இந்த நிமிஷம் அடங்கிப் போறதைத் தவிர வேற வழியே இல்லை."

கண்களில் மின்னும் வெறியோடு அவளுக்கு மிக அருகாமையில் வந்து நின்று மூச்சு விட்டார் சேது.

சுமதியின் இருதயம் உக்கிர வேகத்தில் படபடக்க ஆரம்பிக்க மார்புக்கூடு தூக்கித் தூக்கிப் போட்டது.

விருட்டென வானிட்டி பேகிற்குள் கையை விட்டாள்.

உள்ளே இருந்து அந்தச் சின்னப்புட்டியை துரித கதியில் வெளியே எடுத்தாள்.

"ஸ் ஸ் ஸ் ஸ் ஸ் ஸ் ஸ் ஸ்..."

அவள் தோளைத் தொட்ட சேதுவின் கை நெருப்பற்றி எரிகிறாற் போல தகதகக்க ஆரம்பித்தது.

ஆ— வென்று அலறியபடி கையை உதறிக்கொண்டார் சேது.

சுமதி அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

"உன் மாதிரி ரவுடிகளுக்கு பாடம் புகட்டறதுக்காக நான் இந்த ஆசிட் புட்டியை எப்பவும் என் பேகில் வெச்சிருப்பேன்—இந்த ஆசிட் உன்னை மாதிரி வயசான நரியின் கொட்டத்தை அடக்கப் பயன்படும்னு நான் நினைக்கவே இல்லை...உன் கையைப் பதம் பார்த்த இந்த ஆசிட் நீ அடுத்த அடி எடுத்து வெச்சா முகத்தை எரிக்கும்...அதுக்கப்புறம் ஒரு பொண்ணு அழகானவளா அசிங்கமானவளான்னு பார்க்கிறதுக்கும் கூட உனக்குக் கண்ணு இருக்காது..."

"ஏய்ய்ய்..."

MITHRAVINTHA

"இது ஏசி அறை...சத்தம் வெளியே போகாது... சாவியை என்கிட்டே குடுத்தின்னா உன்னோட மூஞ்சி தப்பும்..."

சேது ஆசிட்—பட்ட கையை வேதனையோடு உதறிக் கொண்டே அவசர அவசரமாய் சாவியை எடுத்தார்.

முகத்தை நோக்கி ஸ்ப்ரே புட்டியை உயர்த்திப் பிடித்த அவளைப் பார்த்துக் கத்தினார்.

"வேண்டாம்...நான் சாவியைக் குடுத்துடறேன்... அந்த பாட்டிலை மொதல்ல உள்ளே வை..."

"கிட்டே வரவேண்டாம்...அங்கிருந்தே சாவியைத் தூக்கிப் போடு..."

அவர் வீசிய சாவியை எடுத்து "க்ளக்"கென கதவை விரித்த சுபமதி வராந்தாவுக்கு வந்த பின்னர்தான் நிம்மதி மூச்சு விட்டாள்.

உள்ளே—

சேதுவுக்கு கையோடு மனசும் சேர்ந்து எரிந்து கொண்டிருந்தது.

## 3

ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியிருந்த யமஹா பைக்கின் மேல் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்த திலீப்—ஹெல்மெட்டை ரியர் வியூ மிரரின் மீது மாட்டிவிட்டு, குளிர் கண்ணாடியைப் பாக்கெட்டில் சொருகிக்கொண்டே எதிரே இருந்த சுபமதியைப் பார்த்து திகைப்புடன் கேட்டான்.

"ஏய்... என்னாச்சு உனக்கு..."



சிமெண்ட் பெஞ்சில் இருந்த சுபமதியிடம் இருந்து லேசாய் விசும்பல்கள் வெளிப்பட்டன. கண்கள் கேரட்டின் உள்தோல் நிறத்துக்கு சிவந்து போயிருந்தன.

"இங்கே பாரு சுபமதி... பைக்கில் வரும்போதே என்கிட்ட எல்லா விஷயத்தையும் கொட்டித் தீர்த்துட்டே.... இது பப்ளிக் பார்க்...பார்க்கிறவங்க என்னைத்தான் தப்பா நினைச்சுப்பாங்க... பையன் அனுபவிச்சுட்டு இப்ப கழட்டி விடப் பார்க்கிறான் போலிருக்குன்னு அவங்கவங்க மனம் போன போக்கில் கற்பனை செய்துக்க ஆரம்பிச்சிருவாங்க..."

சுபமதி கண்களைத் துடைத்து விட்டு—காற்றில் பறக்கும் கேசத்தை ஒதுக்கி விட்டுக்கொண்டே சொன்னாள்.

"சே... இந்த உலகத்தில் எவ்வளவு மோசமான மனுஷங்க இருக்காங்க..."

"துணைக்கு யாருமில்லாம நீ ஹோட்டலுக்குப் போயிருக்கக் கூடாது."

"மாடலிங்கிற்காக நான் எத்தனையோ இடங்களுக்குப் போயிருக்கேன்...இதுவரைக்கும் இப்படி அசம்பாவிதம் நடந்ததில்லை..."

"இத்தனை நாள் நீ ஏஜன்ஸி சார்பா போனே...ஆனா இப்போ ஒரு தனி மனிதனின் வேண்டுகோளுக்காகப் போயிருக்கே...அந்த ஆள் அதை அட்வான்டேஜா எடுத்துக்கப் பார்த்திருக்கான்."

"பெரிய மனுஷன்! என்னோட அப்பா ஸ்தானத்துக்கு அந்த ஆளை மதிக்கலாம்...அந்த தோற்றத்தை நம்பித்தான் நான் ஒப்புக்கிட்டேன்... தவிர சைக்கிள் விளம்பரம் எடுத்த கம்பெனியின் எம்.டி... நம்பற விதமா என்கிட்டே அந்த ஆள் பேசினான். இதுவும் ஒரு தொழில்தானே...ஏன் ஆம்பளைங்க புத்தி இப்படித் தரக்குறைவாப் போகுது."

MITHRAVINTHA

"ஏய்... ஆம்பளைங்கன்னு ஒட்டுமொத்தமாக சொல்லாதே. என்னைப்போல கண்ணியமான ஆம்பளைங்களும் நிறைய பேர் இருக்காங்க."

"அந்த சேதுவைப் போல பசுத்தோல் போர்த்திய புலிகளை எப்படித்தான் கண்டு பிடிக்கிறது."

"போர்வையை விலக்கறப்போதான் கண்டு பிடிக்க முடியும்... விடு சுபாதி... அந்த ஆளைப் பத்திப் பேசிப் பேசி ஏன் டென்ஷன் ஆகணும்...? அதான் கன்னமே பழுக்கிற மாதிரி அந்த ஆளோட கையை ஆக்கிட்டாள் போகக் கேட்டு வந்துட்டியே."

"என் மனசு இன்னமும் ஆறலை... பொதுவாவே நிறைய பேர் மாடலிங் பொண்ணுன்னா கொஞ்சம் மோசமாத்தான் பார்க்கிறாங்க... சில பேர் கண்ணால மேயறாங்க. சில பேர் தயங்கித் தயங்கி வாய் விட்டும் கேட்கிறாங்க... அந்த மாதிரி ஆளுங்களை முறைச்சோ... கடுமையான சொல்லாலேயோ தோல்கட்ட பண்ண வேண்டியிருக்கு... இவன் இன்னும் தைரியமா தொட்டுப் பார்க்கிற அளவுக்கு வந்துட்டான்..."

"கவலைப்படாதே... கையில் ஆசிட் தழும்பு இருக்கிற வரைக்கும் இனிமேல் பொண்ணுங்ககிட்டே விளையாடறதைப் பத்தி அவன் நிச்சயமா யோசிப்பான்."

"வர வர இந்த ப்ரொஃபஷன் மேலேயே எனக்கு வெறுப்பாயிட்டிருக்கு திலீப்."

"சுபாதி... எனக்கு உன்னைப் பத்தி நல்லாத் தெரியும். நீ மாடலிங் பண்றதைப் பத்தி எனக்கு ஆட்சேபம் எதுவுமே கிடையாது. மத்தவங்களோட பார்வைகளையும் கமெண்ட்களையும் நீ இக்னோர் பண்ணிடு... பெண்களுக்கு ஒரு சில ஆண்களால் ஏற்படும் தொல்லைகள் எல்லாத் துறையிலும் இருக்கு."



"நோ திலீப்... ஏதிப்பா மாடலிங் பண்றவங்களையும் சினிமா நடிகைகளையும்... ஒரு விபரீத மாதிரி கண்ணோட்டத்தோடதான் பார்க்கிறாங்க."

"மத்தவங்க கண்ணோட்டத்துக்கும்... என்னை ஒட்டத்துக்கும் நாம என்ன செய்ய முடியும்...? இத நீயாக தேர்ந்தெடுத்துக்கிட்ட துறைதானே!"

"நான் விரும்பப்பட்டுத்தான் மாடலிங் துறையில் நுழைஞ்சேன்... ஆனா உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சப்புறம் எனக்குன்னு ஒரு குடும்பம்... என் கணவன்... என் குழந்தைகள்ன்னு மனசுக்குள்ளே கற்பனைகள் விரிய ஆரம்பிச்ச பிறகு... இந்த ப்ரொஃபஷன் வேண்டாம்னு மனசு சொல்லுது... உங்கையால தாலியை வாங்கிட்டு உன்னுடன் ஒத்தையா மாட்டிக்கிற ஆசை அதிகமாயிடுச்சு... ஆனா..."

"ஆனா... என்ன சுபாதி...?"

"சமீப காலமா அப்படி ஆசைப்படற சமயத்தில் கூடவே ஒரு பயமும் மனசுக்குள்ளே ஏற்படுது..."

நிமிர்ந்து அவளைப் பார்த்தான் திலீப்.

"என்ன பயம்...?"

"நாம முதல்முதலா சந்திச்சிட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கா திலீப்...?"

"மறக்க முடியுமா...? வள்ளுவர் கோட்டம் பக்கத்தில் இருக்கிற அந்தப் பஸ் ஸ்டாப்புக்கு நான் தினமும் உன்னைப் பார்க்கிறதுக்காகவே வந்துடுவேன்." "என்... தினமும் பார்த்துக்கிட்டதால சாதாரணமா அறிமுகம் ஆனோம். நான் ஏறிப்போற பஸ்ஸாக்கும் பின்னால வர்ற ஒரு பஸ் நம்பரைச் சொல்லி அதிலதான் நீங்க ரெகுலரா ஆபீஸ் போறதா சொன்னீங்க..."

MITHRAVINTHA

இளிச்சிரித்தான்.

"அப்புறம் ஒரு நாள் நீ கேட்டா வந்து என்னோட டூட்டி வெளிப்பட்டிருக்க...பைக்கை ஓரமா நிறுத்திட்டு உன்கூட பேசறதுக்காகவே பஸ் ஸ்டாப்பில வந்து நிக்கறேன்னு நீ கண்டுபிடிச்சிட்டே... ஆனா என்னைத் திட்டல உனக்கு மனசு வரலை...என்னா இவ்வளவு நாள் பழகததில் என்னை உனக்கும் பிடிச்சுப் போயிருந்தது..."

"அப்புறம் நம்ம நட்பு நெருக்கமாச்சு... ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் ரொம்ப நல்லாப் புரிஞ்சுக்க ஆரம்பிச்சோம். அதுக்கப்புறம் நான் பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறதில்லை... உங்க பைக்கிலேயே பின்னால உக்காந்து போக ஆரம்பிச்சேன்... ஒரு கம்பெனிக்காக நான் மாடலிங் பண்ணப் போன இடத்தில் எனக்கு முதல் அதிர்ச்சி காத்திருந்தது..."

"எதைச் சொல்றே சுபமதி...?"

"உங்க ப்ரெண்ட்தான் அந்தக் கம்பெனியின் ப்ரொப்ரைட்டர்... அவரைப் பார்க்க நீங்க எதேச்சையா வர... உண்மையிலேயே நீங்க யார்னு அவர் மூலமாகத்தான் எனக்குத் தெரிஞ்சது..."

"என்ன தெரிஞ்சது...?"

"நான் நினைச்ச மாதிரி நீங்க சாதாரண ஆளில்லை... பெரிய பணக்காரர்... தினம் ஒரு காரில் வலம் வரக்கூடிய வசதிபடைச்ச நீங்க... எனக்காக பைக்கில் சுத்தற விஷயம் தெரிஞ்சது..."

"இதிலே அதிர்ச்சி அடைய என்ன இருக்கு சுபமதி...?"

"ஆழம் தெரியாமல் காலை விட்டுட்டா அதிர்ச்சியாகத் தானே இருக்கும்..."

"வாட் டூ யு மீன்...?"



"என்னைப்போல ஒரு மிடில் கிளாஸ் ஃபேமிலியைச் சேர்ந்தவர்ன்னு நினைச்சுத்தான் உங்ககூட நான் பழக ஆரம்பிச்சேன்... அந்த நினைப்பிலேயேதான் உங்ககிட்டே என் மனசையும் பறிகொடுத்தேன்... நீங்க பெரிய பணக்காரர்ன்னு தெரிஞ்ச நாளிலிருந்து என்னோட மனசுக்குள்ளே ஒரு பயம் கலந்த தவிப்பு படர ஆரம்பிச்சிருச்சு நிவி."

"எதுக்கும் பயம்?"

"நம்ம கல்யாணம் எந்தப் பிரச்சனையும் இல்லாம நடக்குமான்னு நினைச்சுத்தான் பயப்படறேன்."

"இதில் என்ன சந்தேகம்...? இதுவரைக்கும் என்னோட சுண்டுவிரல் நகம்கூட உன் மேல பட்டதில்லை... அதிலிருந்தே நான் ஒரு ஜென்டில்மேன்கிறதை நீ புரிஞ்சிருப்பே... என்னை நீ ஹண்ட்ரட் பர்சன்ட் நம்பலாம் சுபமதி."

சுபமதி மெதுவாய் நிமிர்ந்து அவனைப் பார்த்துச் சொன்னாள்.

"நான் உங்க அப்பாவை நினைச்சுப் பயப்படறேன்... உங்க சொத்துக்களைக் குறிவெச்சு உங்களைக் காதலிக்கறேன்னு அவர் என்னைத் தப்பா எடுத்துக்க வாய்ப்பு இருக்கு."

"உன்னோட பயம் அநாவசியமானது... என்னோட அப்பா ஒரு ஜெம்... என்னோட விருப்பம் எதுவானாலும் ஆர்வமா நிறைவேத்தி வெக்கக்கூடியவர்."

"கல்யாணங்கிறது ரொம்ப சென்சிட்டிவான விஷயம். காதலிக்கற நமக்கு மனசு மட்டும்தான் தெரியுது... ஆனா பெத்தவங்களுக்கும், மத்தவங்களுக்கும் அந்தஸ்து, ஜாதி, மதம்னு ஆயிரம் விஷயங்கள் குறுக்கே தெரியுது."



MITHRAVINTHA

''எங்க அப்பா அப்படிப்பட்டவர் இல்லை. சத்தியம் அடிச்சு சொன்னாத்தான் நீ நம்புவே போலிருக்கே...! சுபமதி...! காலம் ரொம்பவே மாறிடுச்சு. பெத்தவங்க எல்லாம் காதலுக்கு மரியாதை குடுக்கிற காலம் இது. கவலைப்படறதை முதல்ல நிறுத்து.''

''நான் கவலைப்படறதை நிறுத்தணும்ன்னா நீங்க உங்க வீட்டுல சம்மதம் வாங்கி கல்யாண ஏற்பாட்டைத் தொடங்கணும்.''

''இன்னிக்கே... இப்பவே வரியா...? உன்னை என்னோட அப்பாகிட்டே கூட்டிட்டுப் போய் அறிமுகப்படுத்தி வெக்கறேன்?''

சுபமதி மகிழ்ச்சி கலந்த பயத்தோடு அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''உங்களை மாதிரி ஒரு தைரியசாலியைக் காதலிச்சதை நினைச்சா எனக்குப் பெருமையா இருக்கு. ஆனா நீங்க அவர் முன்னால கொண்டுபோய் என்னை நிறுத்தினா ஏசாபாசமா ஏதாவது ஆயிடும். வேண்டாம் ப்ளீஸ்... நீங்க முதல்ல அவர்கிட்டே பேசுங்க திலீப். விஷயத்தைச் சொல்லுங்க... அவரா விருப்பப்பட்டா அவரை நான் நேரில் சந்திக்கறேன்.''

புன்னகை உதடுகளுடன் சுபமதியைப் பார்த்த திலீப்—தீர்க்கமான குரலில் அவளிடம் சொன்னான்.

''அநேகமா நாளைக்கு சாயந்தரம் நீ என்னோட அப்பாவைச் சந்திக்க வேண்டியிருக்கலாம். தயாரா இரு சுபமதி.''



## 4

மிருதான்,

குளிரூட்டப்பட்ட அந்த அறையில் சற்றே படபடப்போடு நுழைந்தாள் சுபமதி.

சுழல் நாற்காலியில் திலீப்பின் அப்பா பாண்டித்துரை ஏதோ ஒரு பைலைப் பார்த்துக் கொண்டே இடம் வலமாய் அசைந்து கொண்டிருந்தார். திலீப்புடைய வயதான பதிப்பைப் போலக் காட்சி அளித்தார்.

''அப்பா...''

திலீப் கூப்பிட்டதில் கலைந்துபோய் நிமிர்ந்தவரின் பார்வை சுபமதியின் மேல் சில விநாடிகளுக்கு ஆணியடித்து விட்டுத் திரும்பியது.

''நான் சொல்லலை...சுபமதி...இவதான்...''

சுபமதி கையைக் கூப்பினாள்.

''வணக்கம் ஸார்...''

''உக்காரு...''

ஒரு இன்டர்வியூக்கு வந்ததைப் போல பதட்டத்தோடு இருக்கையின் நுனியில் அமர்ந்தாள் சுபமதி.

''சுபமதி...டோன்ட் பி நெர்வஸ்...பீல் ப்ரீ...''

அவளுக்கு தைரியம் கொடுத்த திலீப்—பாண்டித்துரையிடம் திரும்பிச் சொன்னான்.

''அப்பா... நீங்க இவளுக்கு தைரியம் சொல்லுங்கப்பா... ரொம்ப பயப்படறா...''

பாண்டித்துரை அளவான புன்னகையோடு அவளிடம் கேட்டார்.

MITHRAVINTHA

"என்ன சுபமதி...என்னோட பையன் திலீபைக் காதலிக்கிறப்போ இந்த பயம் உனக்கு இல்லையா...?"

சுபமதி உலர்ந்த உதடுகளை ஈரப்படுத்திக்கொண்டு அவருக்கு பதில் சொன்னாள்.

"இது பயம் இல்லை சார்...ஒரு விதமான குற்ற உணர்ச்சி..."

"குற்ற உணர்ச்சியா...? எதுக்காக...?"

"உங்க மகன் திலீப் ஒரு பெரிய பணக்காரரா என்கிட்டே அறிமுகம் ஆகலை...அப்படி ஆகியிருந்தா இவரைக் காதலிக்கிற எண்ணம் சத்தியமா என் மனசில் விழுந்திருக்காது...ரொம்ப நாள் கழிச்சித்தான் இவரோட அந்தஸ்தும் செல்வாக்கும் எனக்குத் தெரிஞ்சுது... அன்னியிலிருந்தே எனக்குள்ளே குற்ற உணர்ச்சி பரவ ஆரம்பிச்சிடுச்சு...நான் பணத்துக்காக இவரைக் கை பிடிக்கப் பார்க்கிறேன்னு நாளை மத்தவங்க நினைப்பாங்க..."

பாண்டித்துரை அகலமாய்ச் சிரித்தார்.

"நான் உன்னை அப்படி நினைக்கலையம்மா...ஏன்னா திலீப் என்கிட்டே எல்லா விஷயங்களையுமே விபரமா சொன்னான்."

இந்த வார்த்தைகள் அவரிடமிருந்து வந்தபிறகுதான் சுபமதி கொஞ்சம் சகஜ நிலைக்கு வந்தாள்.

"தாங்க்யூ...சார்...தாங்க்யூ வெரிமச்..."

"உன்னை நான் சில டி.வி. விளம்பரப்படங்களில் பார்த்திருக்கேன்."

"எஸ் சார்... மாடலிங்தான் என்னோட தொழில்...உங்க வீட்டுக்கு மருமகளானதுக்கப்புறம் அதையும் விட்டுடலாம்னு இருக்கேன்."



"உன் விருப்பங்களுக்கு இங்கே யாரும் தடைவிதிக்கப் போறதில்லை...அடுத்தவங்க விருப்பங்களுக்கு மரியாதை கொடுத்துப் பழக்கப்பட்டவன் நான்...அதனாலதான் திலீப் நீங்க ரெண்டு பேரும் காதலிக்கிற விஷயத்தை என்கிட்டே சொன்னப்ப ரொம்ப சப்போர்ட்டிவ்வா இருந்துக்கிட்டேன்."

"சார்...இதுபோல பக்குவப்பட்டவங்களைப் பார்க்கிறது அபூர்வமான விஷயம்."

மெல்லியதாய் புன்னகைத்த பாண்டித்துரை பேச்சை வேறு பக்கம் திருப்பிக்கொண்டே பேசினார்.

"ஓ.கே. நம்ம அறிமுகப்படலம் முடிஞ்சுது... அடுத்து கல்யாணம்னு வரும்போது பல விஷயங்கள் முறைப்படி செய்ய வேண்டியிருக்குமே."

நிமிர்ந்தாள் சுபமதி.

"என்ன சார் சொல்றீங்க?"

"உன் வீட்டுப் பெரியவங்களோட நான் பேசணுமே... அவங்களைப் பத்தி கொஞ்சம் சொல்லும்மா."

"அப்பா அம்மா ரெண்டு பேருமே இறந்துட்டாங்க சார்...வீட்டுப் பெரியவங்கன்னா அண்ணா அண்ணி மட்டும்தான் இருக்காங்க."

"அண்ணா என்ன பண்றார்?"

"அவர் டெல்லியில் ஒரு கேட்டரிங் கம்பெனியில் சூப்பர்வைசரா இருக்கார்."

"அண்ணாவும் அண்ணியும் டெல்லியிலா இருக்காங்க?"

"ரெண்டு வருஷத்துக்கு முன்னால டெல்லிக்கு டிரான்ஸ்பர் ஆகிப் போயிட்டாங்க சார்... [illegible]

58438
F1/
MITHRAVINTHA

பிரி ஆயிட்டதால நான் மட்டும் இங்கேயே தங்கிட்டேன்.''

பாண்டித்துரை சில நிமிஷ யோசனைக்குப் பின்பு சொன்னார்.

''முறைப்படி நான்தான் உங்க அண்ணா அண்ணியைத் தேடிப் போய் பொண்ணு கேக்கணும்...ஆனா இப்ப என்னோட வேலைப்பளு என்னை அதுக்கு அனுமதிக்காது... உன்னால அவங்களை அழைச்சிட்டு வர முடியுமாம்மா.''

சுபமதி தலையை அசைத்தாள்.

''அழைச்சிட்டு வர்றேன் ஸார்.''

''எப்போ?''

''நாளைக்கே கிளம்பிப் போறேன்.''

''ஓக்கே...!'' என்றவர் திலீப்பிடம் திரும்பினார்... ''திலீப்...முதல் முதலா சுபமதி நம்ம வீட்டுக்கு வந்திருக்கா...டைனிங் ஹாலுக்கு கூட்டிட்டுப் போ...டிபன் சாப்பிட்டுட்டுப் போகட்டும்.''

அவருடைய அறையிலிருந்து வெளியே வந்ததுமே— சட்டென்று அவளை இடுப்பை வளைத்து மேலே தூக்கி தட்டாமாலை சுற்றினான் திலீப்.

''திலீப்... திலீப்... அய்யோ விடுங்க... யாராவது பார்க்கப் போறாங்க...''

''லைசன்ஸ் க்ராண்ட்டட்...இனிமே யார் பார்க்கறதைப் பத்தியும் எனக்குக் கவலை இல்லை.''

''அய்யோ...ப்ளீஸ் விடுங்க...''

அவனிடமிருந்து உதறிக்கொண்டாள் அவள்.

திலீப் அவளை போலிக் கோபத்தோடு முறைத்தான்.



''உன் மனசுல கொஞ்சம்கூட சந்தோஷமே இல்லையா?''

''சொன்னா சொன்னையா சந்தோஷம் இருக்கு நம்ம காதல் இவ்வளவு சுலுவா கைகூடும்னு நான் நினைக்கவே இல்லை.''

''நீதான் எனக்கு மனைவின்னு விதி விதிக்கப்பட்டிருக்கு தப்போ யாரால அதை மாத்த முடியும் சுபமதி...?''

சிரித்துக்கொண்டே சொன்னான் திலீப்.

ஆனால் விதி வேறு ரூபத்தில் விளையாடக் காத்துக் கொண்டிருந்தது.

## 5

மின்சாரத்தைத் தின்றபடி ராட்சஸ வேகத்தில் பல ஸ்டேஷன்களைக் கடந்து டெல்லியை நோக்கிச் சென்று கொண்டு இருந்த க்ராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் — ஆந்திரா பார்டரில் இருந்த அந்தக்குட்டி ஸ்டேஷனில் இருந்து அந்த நிமிஷம் புறப்படத் தயார் நிலையில் இருந்தது

ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்த சுபமதி ஒரு கையில் டம்ளரை பிடித்துக் கொண்டு இன்னொரு கையை பாக்கி சில்லரைக்காக வெளியே நீட்டியபடி— லேசான பதட்டத்தோடு இந்தியில் குரல் கொடுத்தாள்.

''சீக்கிரம் கொடு...ரயில் கிளம்பப் போகிறது...''

''கொஞ்சம் பொறுங்கள் மேம்ஸாப்...''

அந்த அழுக்கு பனியன் பேர்வழி—தன் பேன்ட் பாக்கெட்டிலிருந்து சுருட்டிய ரூபாய் நோட்டுக்களைக்

MITHRAVINTHA

வெளியெடுத்துக் கொண்டு—ஒவ்வொன்றாய் நிதானமாய் பிரித்து சரி பார்த்தான்.

கார்டு விசில் காதுகளை அறைய சுமதி மறுபடியும் அவனை அவசரப்படுத்தினாள்.

"ஏய்...பாக்கி குடுப்பா..."

ரயில், "ப்ராங்க்க்..." என்று அலறியபோது — அவன் பாக்கிப் பணத்தை அவளிடம் தந்துகொண்டே புன்னகைத்தான்.

"நீங்கள் நினைக்கிற மாதிரி நான் ஏமாற்றுக்காரன் இல்லை மேடம்... நீங்கள் சரியான சில்லறை கொடுத்திருந்தால் இந்நேரம் இரண்டு பேருக்கு டீ சப்ளை பண்ணி யிருப்பேன்...உங்களால் எனக்குத்தான் நஷ்டம்."

சொல்லிவிட்டு அவன் ஜன்னலிலிருந்தும் மறைந்து விட்டான்.

சுமதி ஜன்னலுக்கு உள்ளே கையை எடுத்துக்கொண்ட போது—அவள் கையில் கட்டியிருந்த வாட்ச் சட்டென்று நழுவி விழுந்தது.

திடுக்கிட்டு எட்டிப்பார்த்தாள் சுமதி.

அந்த விலையுயர்ந்த வாட்ச் அவள் கண்முன்னாலேயே ரயில் கம்பார்ட்மெண்ட்டுக்கும் பிளாட்பாரத்துக்கும் நடுவில் இருந்த இடைவெளியில் விழுந்து கொண்டிருந்த

"ஓ காட்."

கவலையும் ஆயாசமுமாய் சுமதி சத்தம் கத்தவே— ரயில் மெதுவாய் நகர ஆரம்பித்திருந்தது.

அவளுக்கு எதிர் இருக்கையில் அமர்ந்திருந்த அழகான இளைஞன் சட்டென அபாய சங்கிலியை இழுத்தான்.



அவள் திகைப்போடு அவனைப்பார்க்க — மற்றவர்கள் கலவரத்தோடு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள்.

ரயில் ஏராளமான பெருமூச்சுக்களோடும்...கீச் சப்தத்தோடும்...கிளம்பின மறுவிநாடியே நின்று விட்டது!

"உங்க வாட்ச் விழுந்ததை பார்த்துட்டுத்தாங்க நான் ரயிலை நிறுத்தினேன்..." என்றான் அவன்.

"ஆ...வாட்சை எடுத்துட முடியுமா...?"

"கார்டு இந்தப் பெட்டியைத் தேடி வருவார்...வந்ததும் அவர்கிட்டே விஷயத்தைச் சொல்லி யாராவது ஆளை விட்டு வாட்சை எடுத்துடலாம்..."

"ஒன்னும் சொல்ல மாட்டாங்களா...?"

"ஒன்னும் சொல்ல மாட்டாங்க...ஆனா கேப்பாங்க."

சிரித்துக்கொண்டே அவன் சொல்ல—நிமிர்ந்து பார்த்தாள் சுமதி.

"என்ன கேப்பாங்க...?"

"சொந்தக்காரணங்களுக்காக செயினை இழுத்திருக்கோம்...அதனால ஃபைன் கட்டச் சொல்லிக் கேப்பாங்க."

"எவ்வளவு ஃபைன்?"

"அதிகபட்சம்...ஆயிரம் ரூபா."

"மைகுட்னஸ்."

தவிப்போடு அவள் தன்னிடமிருந்த பணத்தை எண்ணிப் பார்க்க ஆரம்பிக்க—அந்த இளைஞன் புன்னகையோடு சொன்னான்.

"உங்க வாட்சோட விலை குறைஞ்சது ரெண்டாயிரம் ரூபாயாவது இருக்கும்னு நான் யூகிச்சிருந்தேன்...ஏம் ஐ ரைட்?"

MITHRAVINTHA

"ரெண்டாயிரத்து நூத்தி பத்து ரூபா."

"செயினை இழுக்காம விட்டிருந்தா ரெண்டாயிரத்து சொச்சமும் உங்களுக்கு லாஸ் ஆகியிருக்கும் ... இப்போ ஆயிரம் ரூபாதானே நஷ்டம்...நோ கவலைப்படாதீங்க."

"அதுக்காக இல்லை."

அவன் ஏதோ சொல்ல வரும்போதே—அந்த கம்பார்ட்மெண்ட்டை கார்ட்—என்ஜின் டிரைவர் ... இன்னும் சில அதிகாரிகள் முற்றுகை இட்டிருந்தார்கள்.

ஏர் வால்வ் புஸ்ஸென்ற சப்தத்தோடு செயின் இழுக்கப்பட்ட பெட்டியை அடையாளம் காட்டிக் கொண்டிருந்தது.

கார்ட் கனமான குரலில் கேட்டார்.

"யார் இங்கே செயினை இழுத்து ரயிலை நிறுத்தினது?"

"நான்தான் ஸார்."

அந்த இளைஞன் முன்னால் போனான்.

"எதுக்காக செயினை இழுத்தீங்க?"

"என் ஃப்ரெண்டோட விலையுயர்ந்த வாட்ச் தண்டவாள இடுக்கில் விழுந்துடுச்சு. அதை எடுக்கிறதுக்காக ரயிலை நிறுத்தினேன்."

"மிஸ்டர்."

"ஐயாம் சூர்யப்ரகாஷ்."

"மிஸ்டர் சூர்யப்ரகாஷ்...உங்க அஜாக்கிரதைக்காக."

"கார்டு ஆரம்பித்ததை பாதியில் குறுக்கிட்டு சூர்யபிரகாஷே தொடர்ந்தான்.



"செயினை இழுத்து ரயிலை நிறுத்தினதை எங்களால ஏத்துக்க முடியாது. பொதுநலத்துக்காக அபாய சங்கிலியை இழுத்திருந்தா அதை அனுமதிக்கலாம்...உங்க சுயநலத்துக்காக எத்தனை பயணிகளின் நேரத்தை வீணடிச்சிட்டீங்க. நீங்க ஃபைன் கட்டியாகணும்னு சொல்ல வர்றீங்க...எம் ஐ ரைட் மிஸ்டர் கார்ட்?"

தன் சர்ட் பாக்கெட்டிலிருந்த பர்ஸைப் பிரித்து இரண்டு நூறு ரூபாய்த் தாள்களை எடுத்து அவரிடம் நீட்டினான் அவன்.

அடுத்த சில நிமிஷங்களில்—ஒரு போர்ட்டரின் உதவியோடு தண்டவாளத்தில் நழுவி விழுந்த சுபமதியின் வாட்ச் வெளியே எடுக்கப்பட்டது.

அபராதம் கட்டியதற்கான ரசீது சூர்யப்ரகாஷிடம் நீட்டப்பட்டது.

"முதல் வேலையா வாட்சுக்கு ஸ்ட்ராப் மாத்துங்க மிஸ்...சோம்பேறித்தனத்தாலேயோ... அலட்சியத்தனத்தாலேயோ ஸ்ட்ராப்பை கவனிக்கலைன்னா இப்படித்தான் பெரிய நஷ்டத்துக்கு அது வழிவகுக்கும்."

வாட்சை நீட்டியவனிடம் சுபமதி தவிப்போடு சொன்னாள்.

"நான் பணம் கொடுக்கிறதுக்குள்ளே அவசரப்பட்டு நீங்க ஏன் குடுத்தீங்க?"

"நோ வாட்...செயினை இழுத்தது நான். நான்தான் ஃபைன் கட்டணும்."

"எனக்காக அந்த காரியத்தை நீங்க செஞ்சிருக்கீங்க. அதனால ஐ ஹேவ் டு பே."

"தாராளமா நீங்க பே பண்ணுங்க. எங்கே போயிடப் போறீங்க...மெதுவா உங்ககிட்டே இருந்து நான் பணத்தை வாங்கிக்கறேன்."

MITHRAVINTHA

ரயில் மீண்டும் கிளம்ப ஆரம்பித்தது.

பணத்தை எண்ண ஆரம்பித்தவனைப் பார்த்துப் புன்னகைத்தாள் அவள்.

"நான்தான் மெதுவா வாங்கிக்கறேன்னு சொல்றேனே."

"இல்லை."

"இங்கே பாருங்க...கேப்டன் கட்டணும்னு நான் சொன்ன உடனேயே நீங்க கொஞ்சம் அலட்சியத்தோட பணத்தை செக் பண்ணினதை நான் கவனிச்சேன். உங்க கையிலிருக்கிற பணத்துக்கு வேற செலவுகள் இருக்குன்னு நினைக்கிறேன். இதோ என்னோட கார்ட். மெதுவா நீங்க எனக்கு பணத்தைத் திருப்பிக் கொடுங்க."

கார்டை வாங்கிப் பார்த்தவனின் புருவங்கள் உயர்ந்தன.

"டாக்டர் சூர்யப்ரகாஷ் எம்.எஸ். நீங்க டாக்டரா?"

"ஆமா."

"சென்னையில்தான் ப்ராக்டிஸ் பண்றீங்களா?"

"எஸ்...பொறந்தது...வளர்ந்தது. படிச்சது எல்லாமே சென்னைதான்."

"இப்போ டெல்லிக்கு எதுக்காக போயிட்டிருக்கீங்க?"

"ஒரு மெடிக்கல் செமினார் அட்டெண்ட் பண்றதுக்காக போறேன்."

"எத்தனை நாள் டெல்லியில் இருப்பீங்க?"

"மூணு நாள் இருப்பேன்."

"எங்கே தங்கியிருப்பீங்க."



"ஹோட்டல் சென்டார். எதுக்காக கேக்கறீங்க மிஸ்?"

"அங்கே வந்து உங்களுக்கு நான் தரவேண்டிய பணத்தை திருப்பித் தந்துடறேன்."

"அவ்வளவு அவசரமே இல்லை. உங்க கையில் என்னோட நிரந்தர விலாசம் போன் நெம்பர், கிளினிக் நெம்பர் எல்லாமே இருக்கு. ஆற அமர நீங்க சென்னைக்கு வந்தபிறகு பணத்தைத் திருப்பிக் கொடுத்தா போதும்."

"தாங்க்ஸ் மிஸ்டர் சூர்யப்ரகாஷ்."

"மிஸ்டர் எல்லாம் வேண்டாமே. உங்களை எங்கேயோ பார்த்த மாதிரியே இருக்கு" என்றான் அவன்.

சுமதி பளிச் என்று சிரித்தாள்.

"நீங்க கையில் வெச்சிருக்கிற வாரப்பத்திரிகையில் கூட என்னோட போட்டோ இருக்கு."

"இந்த புஸ்தகத்திலா?"

"புரட்டிப் பாருங்க. என்னோட சிவப்பழகுக்கு நான் என்ன க்ரீம் யூஸ் பண்றேன்னு சொல்லியிருப்பேன்."

ஒரு நிமிஷம் திகைத்து மறுநிமிஷம் புரிந்து கொண்டு கேட்டான் அவன்.

"நீங்க மாடலிங் கேர்ளா?"

"எஸ். என் பேர் சுமதி."

அதன் பிறகு மிச்சமிருந்த முப்பத்தாறு மணி நேரப் பயணமும் அவர்கள் அரட்டையில் போரடிக்காமல் கழிந்தது.

கல்யாண விஷயத்தை முடிவு செய்வதற்காகத்தான் டெல்லி போகிறேன் என்று தீபாவைப் பற்றிச் சொல்ல

MITHRAVINTHA

போது மட்டும் சூர்யப்ரகாஷின் முகம் லேசாகக் கறுத்தது.

"இந்த ரயில் பிரயாணம் ரெண்டு வருஷத்துக்கு முன்னால நடந்திருக்கக்கூடாதான்னு எனக்குத் தோணுது மிஸ் சுபமதி."

சூர்யப்ரகாஷ் சொன்னதை சுபமதி ஸ்போர்ட்டிவ்வாக எடுத்துக் கொண்டாள்.

## 6

ஆட்டோவின் பின்சீட்டில் பேகைத் தூக்கிப் போட்டு விட்டு— உள்ளே நிரம்பினாள் சுபமதி.

"இதர் ஜானா மேம்ஸார்?"

"விக்ரான் நகர்."

"கோன்ஸா க்ராஸ்?"

"தேர்ட் க்ராஸ்."

ஸ்டார்ட்டரை உதைத்து ஆட்டோவை உயிருட்டியதும்— டென்ஷனில் அடைத்து வைத்த சாலைகளில் விர்ர்ர்ரென விரைய ஆரம்பித்தது ஆட்டோ.

பின்சீட்டில் சாய்ந்து உட்கார்ந்து பயணக் களைப்போடு கண்களை மூடிக்கொண்டாள்.

ஸர்ப்ரைஸ் விசிட்....

அண்ணாவும் அண்ணியும் திகைத்துப் போவார்கள்.

"என்ன திடீர்னு வந்திருக்கே?"

அவர்கள் இப்படிக் கேட்கிறபோது— விஷயத்தை ஆரம்பிக்க வசதியாக இருக்கும்.



"உங்க ரெண்டு பேர்கிட்டேயும் ஒரு முக்கியமான விஷயம் பேசணும் அண்ணா."

"முக்கியமான விஷயமா?"

"ம்... அம்மா அப்பா இருந்தா அவங்ககிட்டே சொல்லியிருப்பேன். எனக்கு அம்மா அப்பா ஸ்தானத்திலும் இப்போ நீங்கதானே இருக்கீங்க?"

"என்ன பீடிகை போடறே?"

"வந்து... நான்... இன்னொருத்தரை ரொம்ப ஆழமா நேசிக்கிறேன். அவங்க வீட்டுல சம்மதம் தந்துட்டாங்க. ரொம்பப் பெரிய இடம் அண்ணா... பெரிய பணக்காரங்க... மகனோட விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து அவங்க அப்பா எந்தத் தடையும் போடாம எங்க கல்யாணத்துக்கு முழுமனசோட சம்மதிச்சிருக்கார்... நீங்களும்..."

"கவலைப்படாதே சுபமதி. உன்னோட விருப்பத்துக்குக் குறுக்கே நாங்களும் எப்பவுமே நிக்கமாட்டோம்."

இப்படி அவர்கள் சொல்லிவிட்டால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்?

ஒத்திகை பார்க்கிற மாதிரி மனசுக்குள்ளேயே கற்பனையாய் உரையாடிப் பார்த்துக் கொண்டிருந்தாள் சுபமதி.

சட்டென ஆட்டோ ப்ரேக் போட்டு நின்றதும்தான் கற்பனையிலிருந்து கலைந்தாள்.

மீட்டர் பார்த்துக் காசைக் கொடுத்துவிட்டு— பேகுடன் திரும்பியவள் சட்டென்று திடுக்குற்றாள்.

வீட்டின் முன்னால் நிறைய கும்பல் கூடியிருக்க— 'ஹோ'வென்று அழுகைச் சத்தம் பெரும் டெசிபலில் கேட்டது.

MITHRAVINTHA

"என்னாச்சு?"

அவள் குழப்பமும் அதிர்ச்சியுமாய் யோசித்துக் கொண்டிருந்தபோது— அவள் அண்ணனுடன் வேலை பார்க்கும் சில தமிழ் ஆட்கள் வேகமாய் வந்தார்கள்.

"இதோ... அவரோட தங்கச்சி வந்து சேர்ந்துட்டாங்க."

"அ... அங்கிள்... என்னாச்சு?"

"போனில் உன்னைப் பிடிக்க முடியலை. உனக்கு டெலிபோனுக்கு மேல டெலிகிராம் குடுத்துட்டோம்."

"என்னாச்சுன்னு விஷயத்தை முதல்ல சொல்லுங்க அங்கிள்."

"மாலா... சுமதியை நீ உள்ளே கூட்டிட்டுப் போ."

"ஆன்ட்டி... நீங்களாவது சொல்லுங்க."

அவளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டே உள்ளே கூட்டிச் சென்றார்கள்.

ஹாலில் அவனுடைய அண்ணி நீளமாய்க் கிடத்தப்பட்டிருந்தாள். கழுத்து நிறைய மாலைகள் சார்த்தப்பட்டிருக்க— தலைமாட்டில் ஊதுபத்தி புகைந்து கொண்டிருந்தது.

"அண்ணி..."

சுமதி வீறிட்டாள்.

கதறினாள்.

"அண்ணிக்கு என்னாச்சு... சொல்லுங்க என்னாச்சு."

"அவங்க தற்கொலை பண்ணிக்கிட்டாங்க சுமதி?"

"அண்...அண்ணி தற்கொலை பண்ணிக்கிட்டாங்களா...? ஏன்...? எங்கே அண்ணா...?"



அவளுடைய கேள்விக்குப் பதிலாக அந்தப் பக்கம் கையைக் காட்டினார்கள்.

சுமதியின் அதிர்ச்சி இரண்டு மடங்கானது.

அங்கே அதே மாலை மரியாதைகளோடு கழுத்து வரை வெள்ளைத் துணி போர்த்தப்பட்டு அவளுடைய அண்ணன் கிடத்தப்பட்டிருந்தார்.

"என்னாச்சு... என்னாச்சு..."

கண்ணீர் பொங்கியெழ வீறிட்டாள் சுமதி.

"பாக்டரில வேலை பார்க்கிறப்போ எதிர்பாராத விதமா க்ரேன் தலையில் அடிபட்டு உன்னோட அண்ணன் இறந்துட்டார் சுமதி... அந்த அதிர்ச்சியைத் தாங்கிக்க முடியாம உன்னோட அண்ணியும் தற்கொலை பண்ணிக்கிட்டாங்க."

சுமதி அழக்கூடத் திராணி இல்லாமல் உறைந்து போய் நின்றிருந்தாள்.

## 7

பரந்த மேஜைக்குப் பின்னால் அமர்ந்திருந்த திலீப் இன்டர்காமை அருகில் இழுத்தான்.

ஏ.சி அறை மவுனமாய்க் குளிரூட்டிக் கொண்டிருந்தது. இடது பக்கம் அவன் பார்க்க வேண்டிய ஃபைல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்க—வலது பக்கம் ஒரு லேப்டாப் விரிந்த நிலையில் சப்பணம் இட்டு உட்கார்ந்திருந்தது.

அவனுடைய சுழல் நாற்காலிக்குப் பின்னே நீள் செவ்வக ஒயிட் போர்டும் அதில் பல வர்ண மார்க்கர்களால் வரையப்பட்ட கம்பெனியின் தலைவிதி க்ராஃப் படம்.



MITHRAVINTHA

லொட்டென்று மறுமுனை ரிசீவர் வேகத்தோடு சாத்தப்பட்டது.

ஏமாற்றத்தோடு அந்த டெலிபோனைப் பார்த்துக் கொண்டிருந்தான் திலீப்.

கிரீ...

கிரீ...

கிரீ...

மறுபடியும் அது அலற ஆரம்பித்தது.

ரிசீவரை எடுத்துக் காதோரம் உரசவிட—மீண்டும் செக்ரட்டரியின் குரல்.

"ஸார்..."

"சொல்லு என்ன விஷயம்?"

"சேர்மன் உங்களைப் பார்க்கணும்னு சொன்னார்."

"எங்கே இருக்கார்?"

"அவரோட ரூமில் இருக்கார்."

தன் இருக்கையிலிருந்தும் எழுந்தான் திலீப்.

வராந்தாவில் நடக்க நடக்க—எதிர்ப்பட்டவர்களின் பவ்யமான மரியாதையைப் பெற்றுக்கொண்டே—சேர்மனின் அறையை அடைந்தான்.

CHAIRMAN
M. PANDITHURAI

பித்தளை எழுத்துக்கள் அப்பியிருந்த கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றான்.

"அப்பா கூப்பிட்டீங்களா?"



பாண்டித்துரை நிமிர்ந்து அவனைப் பார்த்துவிட்டு தலையை அசைத்தார்.

"உட்காரு."

"எனிதிங் இம்பார்ட்டெண்ட்."

"முக்கியமான விஷயம்தான்... அதனாலதான் இண்டர்காமில் பேசாம உன்னை நேரில் வரச் சொன்னேன்."

"டேபிள்ல எதையுமே நீங்க எடுத்துட்டு வரச் சொல்லலை... அதிலிருந்து நீங்க கம்பெனி விஷயத்தைப் பேசறதுக்காகக் கூப்பிடலைன்னு யூகிச்சிருக்கேன்."

"யூ கெஸ்ட் ரைட்... இப்போ நான் உன்னைக் கூப்பிட்டது சொந்த விஷயத்தைப் பேசறதுக்காக."

"சொல்லுங்கப்பா."

"நான் என்ன சொல்றதுக்கு இருக்கு...நீதான் சொல்லணும்...சுமதி கிட்டே இருந்து ஏதாவது தகவல் வந்ததா...?"

தயக்கத்தோடு தலையசைத்தான் திலீப்.

"இ...இல்லைப்பா."

"அண்ணா அண்ணியைக் கூட்டிட்டு வர்றேன்னு அவ சொல்லிட்டுப் போய் நாலு வாரங்களுக்கும் மேலாயிடுச்சு."

"ஒரு வேளை அவங்ககிட்டே சம்மதம் கிடைக்கறதில் ஏதாவது பிரச்சனை இருக்கலாம் இல்லையாப்பா."

"இருக்கலாம்...அதை போன் பண்ணி சொல்லியிருக்கலாம்...லெட்டர் போட்டிருக்கலாம்... ஃபேக்ஸில் தகவல் கொடுத்திருக்கலாம். நாலு நாளில் திரும்பி வர்றேன்னு சொல்லிட்டுப் போனவள் முப்பது நாளாகியும் திரும்பி வரலைன்னா அதை எப்படி எடுத்துக்கிறது. எந்தவிதமான

MITHRAVINTHA

தகுதியும் இல்லை. இதைப் பெருமையோடு சொல்லலை நான் எல்லாம் சொல்ல முடியும்.''

''அப்பா.''

''இங்கே பார் நிமி... உன்னோட விருப்பத்துக்கு நான் மதிப்புக் கொடுத்தேன். ஆனா...இப்போ நீ என்னோட விருப்பத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டிய நேரம் வந்திருக்கு. இவ்வளவு அவசியமாக ஒரு பொண்ணைத் தேடித் தேடிப் போய்க் கல்யாணம் பண்ணிக்க அவசியம் உனக்கு இல்லை. என் பிஸினஸ் [illegible] அத்தனை சொத்தையும் [illegible] ஒரே பொண்ணை அதிக பேரில் எழுதி வெச்ச அவரோட முகூர்த்தத்திலேயே உனக்குக் கல்யாணம் பண்ணித் தர தயாரா இருக்கார்.''

''அப்பா...கல்யாணங்கறது பணத்தில் இல்லைப்பா.''

''ஆனா வாழ்க்கை பணத்தில்தானேப்பா இருக்கு.''

''அது பணக்காரங்களின் மனப்பிரமை. வாழ்க்கையும் சரி, கல்யாணமும் சரி மனசு சம்பந்தப்பட்ட விஷயம்.''

''உன்னோட பிரசங்கத்தைக் கேக்கறதுக்காக நான் இங்கே உக்காந்திருக்கலை. நியாயம் பேசி ஏமாத்திட்டுக்கிட்டு... எதுக்காகவும் யாருக்காகவும் காத்திட்டிருக்கிறது எனக்குப் பிடிக்காது.''

''அப்பா...இன்னும் ஒரு மாசம் எனக்காகப் பொறுங்க. அண்ணா அண்ணியிட்டே சம்மதம் வாங்கிட்டு அவங்களைக் கூட்டிட்டு வரப்போற கமலி என்ன ஆனான்னு முதல்ல தெரிஞ்சுக்கறேன். அதுக்கப்புறமா நீங்க என்ன சொன்னாலும் கேக்கறேன். ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக கொடுத்த சம்மதத்தை இவ்வளவு அவசரமா வாபஸ் வாங்கறது பக்குவமான முடிவு இல்லை. தவிர கமலி என் மனசில் நிறைஞ்சிருக்கிற பொண்ணு.''



''ஆனா நிமி.''

''ப்ளீஸ்...அப்பா...எனக்கொரு மாசம் டைம் கொடுங்க. திரும்பவே கமலி என்னை அவமதிப்படுத்தறான்னு தெரிஞ்சா அடுத்த நிமிஷம் நீங்க சொல்ற பொண்ணு கழுத்தில் நான் தாலி கட்டறேன். அப்படி இல்லாம பட்டத்தில் எத்தனை கோடி கொட்டிக் கொடுத்தாலும் நான் கமலியைத் தவிர இன்னொருத்தியை ஏறெடுத்தும் கூடப் பார்க்க மாட்டேன்.''

தீர்க்கமான குரலில் சொல்லும் நிமியை அதிருப்தி மிகும் பார்வையால் பார்த்தபடி பாண்டித்துரை சொன்னார்.

''உனக்கு அதிகபட்சம் ஒரு மாசம் டைம் தர்றேன்.''

ஃ ஃ ஃ

காரை மர நிழலில் நிறுத்திவிட்டு அந்த லேடீஸ் ஹாஸ்டலுக்குள் நுழைந்தான் நிமி.

வயதான வாட்ச்மேன் சற்றே தயக்கத்தோடு கேட்டார்.

''தம்பி...நீங்க யாரைப் பார்க்கணும்?''

''வார்டன் இருக்காங்களா?''

''இருக்காங்க.''

''அவங்களைத்தான் பார்க்கணும்.''

''நீங்க எங்கே இருந்து வர்றீங்க...? என்ன விஷயமா அவங்களைப் பார்க்கப் போறீங்க?''

''அதை நான் அவங்ககிட்டே சொல்லிக்கிறேன்.''

''இல்லைங்க தம்பி...உங்களை உள்ளே அனுப்பறதுக்கு முன்னால அவங்களுக்கு போன் பண்ணி பர்மிஷன்

MITHRAVINTHA

[illegible] அனுமதி கேக்கிறப்போ அவங்கிட்ட [illegible] பத்தி சொல்லணுமே..."

"[illegible] விஷயமாப் பேச வந்திருக்கேன். ரெண்டு [illegible] தான் இவங்கிட்ட போன் பண்ணிப் [illegible] இதைச் சொன்னாலே அவங்க புரிஞ்சு [illegible]"

[illegible]

[illegible] பேசி முடித்துவிட்டு [illegible]

"[illegible] அம்மா உள்ளே கூப்பிடறாங்க."

"[illegible] எங்கே இருக்கு?"

"அதோ அந்தக் கட்டிடம்தான்."

[illegible] தொலைவில் நிமிர்ந்திருந்த கான்கிரீட் [illegible] காட்டினார் அந்த வாட்ச்மேன்.

[illegible] அந்த ஆபீஸ் கட்டிடத்தை நோக்கி நடைபோட்டு வார்டனின் அறையை அடைந்தான்.

"எக்ஸ்க்யூஸ் மீ..."

"கமின்."

வார்டன் அம்மாளின் பார்வையில் ஐந்து சதவீதம் கூட சிநேகம் இல்லை.''

"உங்களுக்கு நான் போனிலேயே விபரமா சொல்லிட்டேன்...இப்ப நேரில் வேற வந்துட்டீங்கள் உங்களுக்கு என்ன வேணும்?"

"மேடம்... என்னைத் தப்பா நினைக்காதீங்க... சுமதியை நான் பார்த்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருக்கேன். நான் அவளோட ஹஸ்பெண்ட்."



— என்று ஆரம்பித்து தங்கள் குடும்பத்தினரின் அனுமதியோடு இருவரும் திருமணம் செய்துகொள்ள இருப்பதையும்— தன் வீட்டில் சம்மதம் பெற்று விட்டாலும் அண்ணா அண்ணியைக் கூட்டி வருவதற்காக சுமதி டெல்லி சென்ற விஷயத்தையும் சுருக்கமாய் அந்தப் பெண்மணியிடம் விவரித்தான் திலீப்.

"நாலு நாளில் திரும்பி வர்றேன்னு சொல்லிட்டு டெல்லிக்குப் போன சுமதிகிட்டே இருந்து இன்னிக்கு வரைக்கும் எந்தத் தகவலுமே இல்லை. அவளோட ஆபீஸ் போன் நம்பருக்கு தினமும் ஒரு முறை டயல் பண்ணிப் பார்க்கிறேன்... அங்கேயும் [illegible] ஆகிட்டே இருக்கு... ஏதாவது எமர்ஜென்ஸின்னா மட்டும் கூப்பிடச் சொல்லி இந்த ஹாஸ்டல் நம்பர் கொடுத்திருந்தாள்... அதனால தான் வேற வழியில்லாம நான் உங்களுக்கு போன் பண்ணினேன்."

"சுமதி டெல்லியிலிருந்து இன்னும் திரும்பி வரலையே..."

"நீங்க அவளைக் காண்டாக்ட் பண்ணிப் பார்க்கலையா?"

"ரெண்டு மாசத்துக்கு மேல வாடகைப் பணம் கட்டாம இருந்தா என்ன ஏதுன்னு விசாரிப்போம். அவ்வளவுதான் மத்தபடி இங்கே தங்கியிருக்கிறவங்க எல்லாரும் வொர்க்கிங் விமன்தானே. அவங்களை எங்கே போறீங்க... ஏன் போறீங்கன்னு கேக்கறதுக்கு எங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அவங்க சுதந்திரத்தில் நாங்க தலையிட முடியாது. ஹாஸ்டலுக்குள்ளே இருக்கிறவரைக்கும் தப்புத்தண்டா எதுவும் நடக்காத அளவுக்குப் பார்த்துப்போம். அவ்வளவு தான்."

"இங்கே அவளோட ஃப்ரெண்ட்ஸ் யாராவது சுமதி தகவல் சொல்லியிருக்காளான்னு கேட்டுச் சொல்லுங்க மேடம்."

MITHRAVINTHA

"கேக்கறேன்."

"அப்படி அவகிட்டே இருந்து எந்தத் தகவலும் வராத பட்சத்தில் அவளோட டெல்லி முகவரி என்னன்னு கேட்டுச் சொன்னாப் பரவாயில்லை."

தயக்கமாய் அவனைப் பார்த்தாள் அந்த வார்டன் பெண்மணி.

"சுபமதியோட டெல்லி முகவரி உங்களுக்கு வேணுமா?"

"ஆமா மேடம். ப்ளீஸ் முதல்ல என்னை நம்புங்க. நான் ஒரு கம்பெனியில் பொறுப்புள்ள மேனேஜிங் டைரக்டர், என்கிட்டே நீங்க அந்த விலாசத்தைக் கொடுக்கிறதால உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் வராது."

வார்டன் பெண்மணி இண்டர்காமை இயக்கினாள்.

"ஹலோ... சுபமதியோட ரூம்மேட் கலா இருக்கா கூப்பிடும்மா."

"........."

"கலா! அண்ணா வீட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டுப் போன சுபமதி இன்னிக்கு வரைக்கும் திரும்பி வரலை. என்கிட்டே ஏதாவது சொல்லியிருக்காளா?"

"........"

"அப்படியா? ஓக்கே...கீழவரை வெச்சிடும்மா."

இண்டர்காமைச் சாத்திவிட்டு— நிமிர்ந்த வார்டன் ஆர்வ முகத்தோடு உட்கார்ந்திருக்கும் திலீப்பைப் பார்த்தாள்.

"அவளோட ரூம் மேட் கலாவுக்கும் சுபமதி ஏன் இன்னும் வரலைன்னு தெரியலை."



திலீப்பின் முகப்பரப்பு சோர்ந்து போனது.

"மேடம்... சுபமதியோட டெல்லி அட்ரஸையாவது தாங்க. நான் அவளை காண்டாக்ட் பண்ணி என்ன விஷயம்னு கேட்டுப் பார்க்கிறேன்."

"ஒரு நிமிஷம்."

வார்டன் அம்மாள் எழுந்து சென்று சுவரில் அப்பியிருந்த பெரிய கப்போர்டின் கதவை விலக்கினாள்.

சில நிமிடத் துழாவலில் அந்த பைலைக் கண்டுபிடித்து அதிலிருந்து சுபமதி டெல்லி முகவரியை எடுத்துக் கொடுத்தாள்.

"தாங்க்யூ மேடம்."

"வெல்கம்... நாங்களும் அவளைத் தொடர்பு கொண்டு என்ன விஷயம்னு தெரிஞ்சிக்க முயற்சி பண்றோம்."

அந்த ஆபீஸ் கட்டடத்தை விட்டு வெளியே வந்து ஹாஸ்டலின் மெயின் கேட்டை நோக்கி திலீப் நடந்து சென்று கொண்டிருந்த போது அந்தப் பெண் குரல் அவன் முதுகுக்குப் பின்னால் கேட்டது.

"எக்ஸ்க்யூஸ் மீ மிஸ்டர் திலீப்."

திரும்பிப் பார்க்க—சாம்பல் நிறத்தில் சுடிதார் அணிந்த அந்தப் பெண் தெரிந்தாள்.

"எஸ்..."

"நான் கலா... சுபமதியோட ரூம்மேட்."

"சொல்லுங்க கலா... என்ன விஷயம்?"

"உங்களைப் பத்தி சுபமதி என்கிட்டே நிறைய சொல்லியிருக்கா."

"என்ன விஷயங்களையும் உங்ககிட்டே சொன்ன சுபமதி எப்ப திரும்பி வருவேன்னு சொல்லலையா?"

MITHRAVINTHA

"உங்ககிட்டே சொன்ன மாதிரி நாலு நாளில் திரும்பி வந்துடுவேன்னு தான் என்கிட்டேயும் சொன்னா. இவ்வளவு நாளாகியும் அவ வராமலே இருந்தால் டெல்லியிலிருக்கும் அவளோட அண்ணனின் அட்ரசுக்கு நான் ஒரு தந்தி கொடுத்தேன்."

திலீப் ஆச்சர்யத்தோடு நிமிர்ந்தான்.

"இஸிட்...? அந்தத் தந்திக்கு சுமதி பதில் கொடுத்தாளா மிஸ் கலா?"

"இல்லை...அந்தத் தந்தி திரும்பி வந்துச்சு."

"தந்தி திரும்பி வந்துடுச்சா?"

"ஆமா...அட்ரஸ் நாட் ஃபவுண்ட்ங்கற குறிப்போட டெலிகிராம் ஆபீஸ்காரங்க திருப்பி அனுப்பிட்டாங்க."

"நீங்க டெலிகிராம் சுமதி பேருக்கு அனுப்பினீங்களா...இல்ல அவளோட அண்ணன் பேருக்கு அனுப்பினீங்களா?"

"கேர் ஆஃப் முகவரியில் அண்ணன் பேர் குடுத்தேன்... சுமதி அங்கே இல்லைன்னாலும் அவளோட அண்ணனோ அண்ணியோ தந்தியை ரிசீவ் பண்ணியிருக்கணுமே?"

திலீப்பின் மனசுக்குள் கவலையின் ரேகைகள் ஆழமாய்ப் பதிய ஆரம்பித்தன.

"இந்த விஷயத்தை நீங்க ஏன் வார்டன்கிட்டே சொல்லலை?"

"அதுக்கு காரணம் இருக்கு."

"என்ன காரணம்?"

"எங்க வார்டன் ஒரு சந்தேகப் பேர்வழி...யாரையுமே அவ்வளவு சுலபத்தில் நம்பவே மாட்டாங்க...இந்த விஷயம்



அவங்களுக்குத் தெரிஞ்சாதுன்னா அப்புறம் சுமதி திரும்பி வந்தான்னா அவளுக்கு இந்த ஹாஸ்டலில் இடம் தர மாட்டாங்க."

"ஏன்...?"

"ஏதோ தப்பான டெல்லி முகவரியைக் குடுத்துட்டு அவ இங்கே தங்கியிருக்கான்னு அவ பேர்ல தப்பபிப்ராயம் ஏற்பட்டுடும் ... அதனால நானாகப் போய் அவங்ககிட்டே எதையும் சொல்ல வேண்டாம்ன்னு நினைச்சேன்... யாராவது டெல்லி போறவங்ககிட்டே சொல்லி இதைப் பத்தி விசாரிக்கணும்ன்னு நினைச்சிருந்தேன்."

அந்தத் தந்தியைக் கையில் வாங்கிக் கொண்ட திலீப்—நேராக ஏர்போர்ட் செல்வது என்று முடிவெடுத்தான்.

'டெல்லி செல்வதற்கு டிக்கெட் ரிசர்வ் செய்ய வேண்டும்.

## 8

டீபாய் மேலிருந்த புட்டியைக் கையிலெடுத்த பொன்னிறத்தில் அசையும் திரவத்தைக் கோப்பைக்கு சரிய விட்டார் சேது.

பாட்டிலைச் சரிக்கிறபோது — புறங்கையின் மேல் தோல் சற்றே மடங்க—ஆசிட் பட்ட காயம் சுரீரென்று எரிந்தது.

"என்னாச்சு மிஸ்டர் சேது?"

அன்றைக்குக் காயத்தைப் பரிசோதித்த டாக்டர் கவலையோடு விசாரித்தது நினைவுக்கு வந்தது.

"ஆசிட் பட்டுடுச்சு."

MITHRAVINTHA

"எப்படி?"

"ஒரு புது ப்ராடக்ட்டை டெண்ட் பண்ண முயற்சி செஞ்சேன்...தவறுதலா ஆசிட் புட்டி கை மேல விழுந்து தழிச்சு டாக்டர்."

"பார்த்து கவனமா வேலை செய்யக்கூடாதா மிஸ்டர் சேது...? ரொம்ப கான்சன்ட்ரேட்டட் ஆசிட்டா இருக்கும் போலிருக்கு...காயம் ஆறதுக்கு வெகு நாள் பிடிக்கும்... கையில பட்டதால பரவாயில்லை ... முகத்திலோ... கண்ணிலோ பட்டிருந்தா என்னாகிறது...? காயம் ஆறினாலும்...அவ்வளவு சீக்கிரத்தில் தழும்பு மறையாது."

இந்தக் காயம் இருக்கிற வரைக்கும் என்னோட மனசுக்குள்ளே அந்த கபாலியோட ஞாபகமும் இருந்துட்டே இருக்கும்.

வெளியில் சொல்லவில்லை.

மனசுக்குள் கறுவிக்கொண்டார் சேது.

தட்...

தட்...

தட்...

டேட் அவுட் கதவு தட்டப்பட்டது

"கமின்."

கைப்பிடியைக் கீழே அழுத்திக்கொண்டே உள்ளே வந்தார் மார்க்கெட்டிங் மேனேஜர் நந்தா.

"குட்ஈவினிங் ஸார்."

"குட்ஈவினிங் இருக்கட்டும்...அந்த ரூம் ஷெல்ஃப் மேல ஒரு ஆயின்மெண்ட் இருக்கும் எடுத்துட்டு வா."

நந்தா ஒரு விசுவாசமான வேலைக்காரனைப் போல விரைந்து சென்று ஆயின்மெண்ட்டோடு திரும்பி வந்தார்.



"காயத்தைக் காட்டுங்க ஸார்...நானே போட்டு விடறேன்."

வலிய அவருடைய கையை இழுத்து—காயத்தின் மேல் ஆயின்மெண்ட்டை வைத்தார் நந்தா.

"ரொம்ப பெரிசா இருக்கே ஸார்."

"இந்த வலியை விட மனசில் பட்ட வலி ரொம்ப அதிகமா இருக்கு நந்தா...ஒரு பொட்டச்சி என்னோட கண்ணிலே விரலை விட்டு ஆட்டிட்டுப் போயிட்டா பாரு."

"எனக்கே மனசுக்கு ரொம்பக் கஷ்டமாத்தான் இருக்கு ஸார். இது நாள்வரைக்கும் மனசில் நினைச்ச எதையுமே நீங்க அடையாமல் விட்டதில்லை..."

"அப்படின்னா ... கபாலி விஷயத்தில்...அவளை நான் அடையாமல் விட்டுட்டேன்னு சொல்றியா...? தெரியும்... நான் அவளை அடைஞ்சே தீருவேன்...எங்கே போயிடுவா...? அவளோட ஆக்டிவிட்டிஸைக் கண்காணிச்சு...அவ தங்கியிருக்கிற இடம்...வழக்கமா போற இடங்கள்...எங்கே வெச்சு அவளை மடக்கலாம்...எல்லாத்தையும் பத்தி ஒரு ரிப்போர்ட் எழுதித் தரச் சொன்னேனே...?"

"அது விஷயமாகத்தான் உங்ககிட்டே பேச வந்தேன் ஸார்..."

"ரிப்போர்ட் ரெடியா?"

"இ...இல்லை ஸார்..."

"என்ன விளையாடறியா...? ஒரு நூறு ரூபாய்க் கட்டை உன் கையில் கொடுத்து...நாலு நாளைக்கு ஆபீஸ் லீவும் கொடுத்தேன்...முழுசா அதை முழுங்கிட்டு வந்து ரிப்போர்ட் ரெடி ஆகலைன்னு சொல்றியே...நல்ல பேர் தூ..."

விசிறிவிட்டதுபோல் கோபத்தின் வெப்பம் கனத்திருக்க—நந்தாவை எரித்து விடுவதைப் போலப் பார்த்தார் சேது.

MITHRAVINTHA

"அவசரப்படாதீங்க ஸார்... நான் சொல்றதை முழுசமா கேளுங்க."

"சொல்லு."

"சுபாங்கி இந்த ஊரை விட்டே ஓடிப்போயிட்டா."

"என்ன சொல்றே?"

"அவ தங்கியிருக்கிற ஹோஸ்டல்... பார்லெர் காம்பௌண்டில் அவ பிடிச்சிருக்கிற டேபிள் ஸ்பேஸ் ஆபீஸ்... அவ வழக்கமா போற சில அட்வர்டைசிங் ஏஜன்ஸீஸ்... எல்லா இடங்களையும் ஒண்ணு விடாம அலசிப் பார்த்துட்டேன்... எங்கேயுமே அவ இல்லை ஸார்... ஒரு மாசமாவே அவளைக் காணோம்... அவளை மாடலிங்குக்கு புக் பண்ணின ஏஜன்ஸீஸ் கூட ஆளைமாத்தி ஷூட் பண்ணிட்டிருக்காங்க... ஒரு தகவலும் இல்லாம அவ அப்ஸ்கொண்ட் ஆயிட்டா..."

"சுபாங்கி எதனால அப்படித் தலைமறைவானா?"

"காரணம் தெரியலை ஸார்... ஒரு வேளை உங்களுக்கு பயந்து அவ ஓடி ஒளிஞ்சிட்டாளோ என்னவோ?"

"அவ எதுக்காக தலைமறைவாகி இருந்தாலும் சரி... இந்த உலகம் உருண்டையானது சந்தா... மறுபடியும் என் கண்ணில் படாமப் போக மாட்டா... அவளுக்கு வெச்சுக்கறேன்."

சேது சற்றே மகிழ்ச்சியோடும்... குரூர சந்தோஷத்தோடும் புன்னகைத்தார்.

* * *

என்ஸபீசி விமானம் ரன்வேயை விட்டு உயரக் கிளம்பியிருக்க பெல்ட்டுகளை அவிழ்த்துக் கொள்ளலாம் என்றாள் பணிப்பெண்.



திலீப் இருக்கையில் நன்றாகப் பின்னுக்கு சாய்ந்து உட்கார்ந்த போது—பக்கத்து இருக்கை நபர் மெலிதாய்ப் புன்னகைத்தார்.

சிரமப்பட்டு உதடுகளைப் பிரித்து பதில் புன்னகை பூத்தான் திலீப்.

அவர் கையை நீட்டிக்கொண்டே தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

"ஐயாம் சேது."

"ஐயாம் திலீப்."

பரஸ்பரம் கை குலுக்கிக் கொண்டார்கள்.

சேது புன்னகைத்தார்.

"என்னால உம்மணாமூஞ்சி மாதிரி பக்கத்திலிருக்கிறவங்க கூடப் பேசாம இருக்க முடியாது."

"கலகலப்பா இருக்கிறது நல்ல ஹாபிட் தானே... ஐ லைக் இட்."

"பாடியில் சைக்கிள் மானுபாக்சரிங் யூனிட்டும்... பெஸ்டிசைட் கம்பெனியும் வெச்சிருக்கேன்."

"ஐ ஸீ... கம்பெனி விஷயமாகத்தான் டெல்லிக்குப் போயிட்டிருக்கீங்களா."

சேது மீண்டும் புன்னகைத்தார்.

"உங்க கேள்விக்கு ஆமான்னும் சொல்லலாம்... இல்லைன்னும் சொல்லலாம்."

"நீங்க சொல்றது புரியலையே மிஸ்டர் சேது."

"டெல்லியில் நடக்கிற இண்டஸ்ட்ரியல் ட்ரேட் எக்ஸிபிஷனைப் பார்க்கிறதுக்காக நான் போயிட்டி



MITHRAVINTHA

இக்கேன்...ஒரு இன்டஸ்ட்ரியலிஸ்ட்கிற முறையில் அதைப் பார்க்கிறது உபயோகமா இருக்கும்... அதே சமயத்தில் இந்தப் பயணத்தைத் தவிர்க்கிறதால எனக்கு ஒண்ணும் பெரிசா நஷ்டம் வந்துடப்போறதில்லை...அதான் அப்படிச் சொன்னேன்."

பணிப்பெண் கொண்டு வந்த ஸ்நாக்ஸை எடுத்துக் கொண்டு சேது அவனிடம் கேட்டார்.

"திலீப்...உங்களைப் பத்தி நீங்க எதுவும் சொல்லலையே?"

"நானும் ஒரு இன்டஸ்ட்ரியலிஸ்ட்தான்...அப்பா பாண்டித்துரையோட க்ரூப் கம்பெனிகளை கொஞ்சம் கொஞ்சமா நான் டேக் ஓவர் பண்ணிட்டிருக்கேன்."

"ஓ...அவரோட ஸன்னா நீங்க...அப்படின்னா நீங்களும் இன்டஸ்ட்ரியல் ட்ரேட் எக்ஸிபிஷனுக்குதான் போறீங்கன்னு நினைக்கிறேன்."

மெலிதாய்த் தலையை அசைத்தான் திலீப்.

"இல்லை மிஸ்டர் சேது."

"வேற பிஸினஸ் மீட்டிங்கா?"

"இல்லை...என்னோட டெல்லி ட்ரிப் பூரா பர்சனல்...ஒரு சொந்தக் காரியத்துக்காக நான் இப்ப டெல்லிக்குப் போயிட்டிருக்கேன்."

"உங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?"

"இல்லை."

சேது கண்சிமிட்டினார்.

"அப்போ உங்களை மாதிரி இளைஞர்களுக்கு சொந்தக் காரியம்ன்னா ஒண்ணே ஒண்ணுதான் இருக்க முடியும்...



உங்க வுட்பி ஒய்ஃபைப் பார்க்கிறதுக்காக போயிட்டிருக்கீங்க...ஏம் ஐ ரைட்."

திலீப்பும் பெருமூச்சோடு தலையை அசைத்தான்.

"எஸ்."

"ஒரு விஷயம் எனக்குப் புரியலை திலீப்... வுட்பி ஒய்ஃபைப் பார்க்கப் போகிற உற்சாகம் உங்க முகத்தில் இல்லையே...ரொம்ப சோகமா இருக்கீங்களே?"

"ஒரு மாசத்துக்கு முன்னால டெல்லிக்கு வேலைப் போன அவளைப் பத்தி இன்னிக்கு வரைக்கும் எந்தத் தகவலுமே இல்லை. அவளுக்கு என்ன ஆச்சன்னு பார்க்கிறதுக்காக இப்ப நான் டெல்லி போயிட்டிருக்கேன்."

"மைகுட்னஸ்... உங்களுக்கு இடையில் ஏதாவது ப்ராப்ளமா...அந்தப் பெண் கோபத்தில் டெல்லிக்கு வந்து சைலன்ட்டா இருக்காங்களா?"

"அப்படி ஏதாவது இருந்தால் கூட மனசுக்கு சமாதானமா இருக்கும்... எங்களுக்கு இடையில் எந்தப் பிரச்சனையும் இல்லை—அப்பாவும் கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டார்... அண்ணா அன்னிகிட்டே சம்மதம் வாங்கிட்டு அவங்களைக் கூட்டிட்டு வர்றேன்னு சொல்லிட்டுப் போனா."

"ஒரு வேளை அவங்க சம்மதம் கிடைக்கலையோ என்னவோ?"

"இது பரிதாபத்துக்குரிய நிலைமைதான். டெல்லியைச் சேர்ந்த பொண்ணு எப்படி உங்களுக்குப் பழக்கம் ஆனாள்? மெட்ராஸ்ல படிக்கிறாளா?"

"நோ...நோ... மாடலிங் பண்ணிட்டிருக்கா"

சேது தட்டென்று நிமிர்ந்தார்.

MITHRAVINTHA

"திலீப்...என்ன சொன்னீங்க? அந்தப் பொண்ணு மாடலிங் கேர்ளா...?"

"ஆமா."

"பேரு?"

"சுபமதி."

அவருக்கு பதில் சொன்னவன் அவருடைய முக மாற்றங்களைப் படித்து விட்டுக் கேட்டான்.

"உங்களுக்கு சுபமதியைத் தெரியுமா?"

"தெரியும்... நானும்தான் அவளை மும்முரமாத் தேடிட்டு இருக்கேன்."

"நீங்களும் சுபமதியைத் தேடிட்டிருக்கீங்களா? எதுக்காக?"

"அவளை மாடலிங்காப் போட்டு அட்வெர்டைஸ் ஃபிலிம் ஷூட் பண்ணணும் அட்வான்ஸ் பணம் கொடுத்து கால்ஷீட் படம் ஷூட் பண்ணியாச்சு இடையில் அவளைக் காணோம்..."

வருத்தம் தோய்ந்த குரலில் திலீப் சொன்னான்.

"அவளுக்காக உங்ககிட்டே நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன் மிஸ்டர் சேது. அவளால உங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவோ அதை நான் செட்டில் பண்றேன்."

சேது அகலமாய்ச் சிரித்தார்.

"அவளாலே ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவோ அதை நான் செட்டில் பண்றேன்...

சேது அகலமாய்ச் சிரித்தார்.

"அவளாலே ஏற்பட்ட நஷ்டத்தை அவளே வந்தால் தான் சரிக்கட்ட முடியும் திலீப்."



"மிஸ்டர் சேது...வாட் டூ யூ மீன்?"

"என்னைப் பொறுத்தவரைக்கும் சுபமதியோட முகம் ரொம்ப ராசியான முகம்...என்னோட நியூ ப்ராடக்ட்டை கண்டிப்பா அவளை வெச்சுத்தான் விளம்பரப்படுத்தணும்னு இருக்கேன்...பணம் எனக்குப் பெரிய விஷயமில்லை திலீப்...அவள் எங்கிருந்தாலும் தேடிக்கண்டு பிடிச்சுக் கூட்டிட்டு வந்து எங்க 'அட் ஃபிலிமை கம்ப்ளீட் பண்ணணும்...டெல்லியில் அவ எங்கிருக்கா?"

"சுபமதியின் அண்ணாவோட முகவரி இருக்கு...ஆனா அங்கே அனுப்பின டெலிகிராம் அட்ரஸ் நாட் ஃபவுண்ட்ன்னு திரும்பி வந்துடுச்சு..."

"நாம ரெண்டு பேருமே சுபமதியைத் தேடிக் கண்டு பிடிக்கணும்ங்கற ஒரே நோக்கத்தோட இருக்கோம் எனக்கு டெல்லியில் நிறைய ஆட்கள் இருக்காங்க. உங்களுக்கு என்ன உதவி வேணுமானாலும் என்னைக் கேளுங்க...ஆக மொத்தத்தில் சுபமதியைக் கண்டுபிடிச்சே ஆகணும்."

அவர் காட்டும் அக்கறை [illegible] என்பதை அறியாத திலீப்—நெகிழ்ச்சியோடு அவரைப் பார்த்தான்.

## 9

ஹோட்டல் அறையின் சோபா மெத்தையில் மல்லாந்து படுத்திருந்த சேது நெஞ்சின் மேல் டெலிபோன் இன்ஸ்ட்ருமென்ட்டை வைத்துக் கொண்டு பொத்தான்களை அழுத்தினார்.

"ஹலோ...ரிசப்ஷன்."

"நான் ரூம் நெம்பர் த்ரீ ஒன் எய்ட்டிலிருந்து பேசறேன். சென்னை நெம்பர் ஒன்னு தர்றேன்...கனெக்ட் பண்ணுங்க."

MITHRAVINTHA

"எஸ் ஸார்...ஜஸ்ட் ஹோல்ட் ஆன்."

நம்பரைச் சொல்லி விட்டுக் காத்திருந்தார் சேது. சில விநாடிகளில் இணைப்புக் கிடைத்துவிட நந்தாவின் குரல் மறுமுனையிலிருந்து ஆர்வமாய்க் கேட்டது.

"ஹலோ"

"நந்தா...நான் சேது பேசறேன்."

"சொல்லுங்க ஸார்."

"நீ உடனே டெல்லிக்கு கிளம்பி வரணும்".

"நா... நான் டெல்லிக்கு வரணுமா" என்ன விஷயம் ஸார்?"

"இங்கே உன்னோட உதவி எனக்குத் தேவைப்படுது."

"ட்ரேட் ஃபேர்ல ஏதாவது பிரச்னை ஏற்பட்டு இருக்கா ஸார்?"

"எஸ்...உன்னை நான் கம்பெனி வேலையில் நீ காட்டற சமர்த்தியத்துக்காகவா வெச்சிருக்கேன். இல்லை என்னோட சொந்த வேலைகளில் நீ காட்டற சாமர்த்தியத்துக்காகத்தான் சம்பளம் குடுத்து வெச்சிருக்கேன்."

"புரியுது ஸார்...யார் அவ? என்ன பண்றா...? பேர் என்ன?"

"சுமதி."

சேது சொல்ல—மறுமுனை நந்தாவிடம் சில விநாடிகளுக்கு திகைப்பு கலந்த மவுனம் நிலவியது. பின்பு கேட்டார்.

"சுமதி அங்கே இருக்காளா?"

"ஆமா...ஃபிளைட்ல நான் அவளோட காதலனைப் பார்த்தேன் அதன் மூலமாகத்தான் அவ டெல்லில இருக்



கான்னு தெரிஞ்சுது. ஆனா டெல்லில அவ எங்கே இருக்கான்னு அவனுக்கும் தெரியாது... மும்முரமா அவன் சுமதியைத் தேடிட்டிருக்கான். நாமும் களத்தில் இறங்கலாம். அவன் முதல்ல கண்டுபிடிச்சாலும் சரி... நாம முதல்ல கண்டு பிடிச்சாலும் சரி...சுமதி என்னோட கைக்கு வரணும்."

"இருக்கிற இடம் மட்டும் தெரிஞ்சாப் போதும் ஸார்... சுமதியை உங்க கையில் கொண்டு வந்து சேர்க்க நான் இருக்கேன்."

"சொல்லாதே செய்."

ரிஸீவரை வைத்த சேது— கண்ணாடி டம்ளரில் இருந்த மினரல் வாட்டரை கடகடவென தொண்டைக்கு சரித்தார்.

சர்ஜிக்கல் காட்டனால் சுற்றிக் கட்டப்பட்ட ஆசிட் காயத்தையே ரொம்ப நேரத்துக்கு வெறித்துக் கொண்டிருந்தார் அவர்.

## 10

விஜ்ஞான நகர் மூன்றாவது குறுக்குத் தெருவில் டாக்ஸியை நிறுத்திவிட்டு— மீட்டர் பார்த்துக் காசைக் கொடுத்தான் திலீப்.

டாக்ஸி புகை மண்டலத்தை அந்த இடம் பூராவும் பரப்பி விட்டுவிட்டு ஜுர்ரென்று விரைந்து சென்றபின்— கையிலிருந்த துண்டுச்சீட்டு முகவரியைப் பார்வையிட்டான்.

'டோர் நம்பர் ஐம்பத்தெட்டு...'

காம்பவுண்ட் கேட்டில் எழுதப்பட்டிருந்த கலை சிறந்த எண்களைப் பார்த்துக்கொண்டே சிறிது தூரம் நடக்க— ஐம்பத்தெட்டு கண்ணில் தட்டுப்பட்டது.

MITHRAVINTHA

காம்பவுண்ட் கதவைத் திறக்க முயன்றபடியே சற்று உள்ளே வாங்கியிருந்த முகப்புக்கதவைப் பார்வையிட்டு வாங்கிய திலீப் லேசாய்த் திகைத்தான்.

காம்பவுண்ட் கேட் அசையும் ஓசை கேட்டு பக்கத்து வீட்டுப் பெண் எட்டிப் பார்த்தாள்.

திலீப்பைப் பார்த்ததும் தனது முந்தானையை முக்காடாகப் போட்டுக்கொண்டே— இந்தியில் கேட்டாள்.

"கோன்...?"

திலீப் அவளிடம் சற்றே சிரமமான ஹிந்தியில் கேட்டான்.

"இவர்கள் வீட்டில் எங்கே போயிருக்கிறார்கள்?"

"அங்கே யாருமில்லை."

"மதராஸில் வேலை பார்க்கும் சுமதியின் அண்ணன் வீடுதானே இது?"

"முன்பு அவர்கள் இங்கே இருந்தார்கள். இப்போது அந்த வீட்டில் யாரும் குடித்தனம் இல்லை."

லேசாகத் துணுக்குற்ற திலீப்—தனது கேள்வியைத் தொடர்ந்தான்.

"வேறு பக்கம் குடிபோய் விட்டார்களா? எங்கே போயிருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?"

"நீங்கள் அவர்களுக்கு என்ன ஆக வேண்டும்?"

"சுமதியின் நண்பன்."

"உங்களுக்கு விஷயம் தெரியாது என்று நினைக்கிறேன் சுமதியின் அண்ணாவும், அண்ணியும் சில வாரங்களுக்கு முன்புதான் இறந்துவிட்டார்கள்."



அதிர்ந்து விட்டான் திலீப்

"எப்படி? என்னாச்சு?"

திலீப் தமிழில் பேச சிரமப்படுவதை உணர்ந்து கொண்டாள் அந்தப் பெண்.

கேட்டாள்,

"நீங்க மதராஸியா?"

"ஆமாம்."

"அதோ அந்த பச்சைப் பெயிண்ட் அடித்த வீடு தெரியுதா?"

"சொல்லுங்கள்."

"அந்த வீட்டில் குடியிருப்பவர்கள் மதராஸிதான். சுமதியின் அண்ணனோடு வேலை பார்க்கிறார்கள். அவர்களிடம் நீங்கள் விபரமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்."

அந்தப் பெண்ணுக்கு நன்றி தெரிவித்துவிட்டு—கலங்கிப் போன யோசனைகளோடு அவள் சொன்ன வீட்டை அடைந்தான்.

அந்த வீட்டில் பைஜாமா அணிந்திருந்த இளைஞன் ஒருவன் திலீப்பை வரவேற்று முன் அறையில் உட்கார வைத்தான்.

"என்னோட அண்ணாவோடதான் அவர் வேலை பார்த்திட்டிருந்தார். நினைச்சாலே ரொம்ப பரிதாபமா இருக்கு. சுமதியோட அண்ணன் ஃபாக்டரி ஆக்ஸிடெண்ட்டில் இறந்தது ஒரு கொடுமைன்னா... அந்தச் செய்தியைக் கேட்டதும், அண்ணி தற்கொலை பண்ணிகிட்டு இறந்துபோனது அதைவிடக் கொடுமை. இப்ப அந்தப் பொண்ணு சுமதி யாருமில்லாத அனாதை ஆயிட்டா."

MITHRAVINTHA

"வீட்டைக் காலி பண்ணிட்டாங்களா?"

"ஆமா. இங்கே இனி யார் இருக்கா? அந்தப் பொண்ணு சுபமதி மெட்ராஸில் வேலை பார்க்கிறா. அதனால அவளும் ஓனர்கிட்ட பேசி செட்டில் பண்ணி வீட்டைக் காலி பண்ணியாச்சு. என்னோட அண்ணன்தான் அட்வான்ஸெல்லாம் திருப்பி வாங்கிக் கொடுத்தார்."

"சுபமதி மறுபடியும் மெட்ராஸ் போயிட்டான்னா சொல்றீங்க?"

"ஆமா"

"இல்லே. அவ இன்னும் மெட்ராசுக்கு வரலை. அவளோட ஹாஸ்டல் ரூம்க்கு அவ திரும்பலை. அவளோட ஆபீஸ் ரூமும் பூட்டியே கிடக்கு. அவ வொர்க் பண்ற ஏஜன்சிகள் எல்லாம் ஏன் சுபமதியை இன்னும் காணோம்னு தவிச்சிட்டிருக்காங்க. அட்லீஸ்ட் எனக்குக்கூட எந்தத் தகவலும் தரலை."

"ஆச்சரியம்தான். ஆனா அண்ணா அண்ணியோட திடீர் மரணம் அந்தப் பொண்ணை ரொம்பவே உலுக்கி எடுத்துடுச்சு. விரக்தியா இருந்தா. விரக்தியில் அவ என்ன முடிவு எடுத்தான்னு தெரியலையே."

அவள் வார்த்தைகளின் தீவிரம் திலீப்பின் அடி மனசை திகீரென்று அழுத்தது.

ஃ ஃ ஃ

தளர்ந்த முகத்தோடு ஹோட்டலுக்குத் திரும்பிய திலீப்பை ரிசப்ஷனில் ஒரு குரல் தடுத்தது.

"மிஸ்டர் திலீப்..."

திரும்பிப் பார்க்க—உயர்ந்த குஷன் சோபாவிலிருந்து விடுபட்டு வந்தார் அவர்.



"நான் சேதுவின் உதவியாளர் நந்தா."

"ஓ... க்ளேட் டு மீட் யூ."

"ஆனா மிஸ்டர் திலீப்...நீங்க பார்க்கறதுக்கு சந்தோஷமாத் தெரியலையே. என்னோட பாஸ் என்கிட்டே உங்களைப் பத்தி எல்லா விபரமும் சொன்னார். போன காரியம் என்ன ஆச்சு?"

"ப்ச்..."

"சுபமதியைப்பத்தி ஒண்ணும் தெரியலையா?"

"இல்லை."

"பாஸ் உங்களைப் பார்க்க விரும்பினார். உங்க வருகையை எதிர்பார்த்துத்தான் நான் ரிசப்ஷனில் காத்திட்டிருந்தேன்."

"ரூம்ல தான் இருக்காரா?"

"எஸ்... வாங்க."

லிப்ட்டில் திலீப்பைக் கூட்டிக்கொண்டு சென்ற நந்தா. கதவைத் தட்டி அனுமதி வாங்கிக்கொண்டு திலீப் தங்கியிருக்கும் அதே ஹோட்டலில் அறை எடுத்திருந்த சேதுவின் முன்னால் நின்றார்.

சேது திலீப்பிற்கு நாற்காலியைக் காட்டினார்.

"திலீப் தான் விசாரித்துத் தெரிந்துகொண்ட விபரங்களை சேதுவிடம் சொல்ல—அவர் யோசனையாய் மோவாயை வருடினார்.

"மொத்தத்தில் சுபமதி எங்கே இருக்காள்னு இன்னும் நமக்குத் தெரியலை."

"அவ சென்னைக்கே திரும்பிப் போயிட்டான்னு பக்கத்து வீட்டுக்காரங்க சொல்றாங்க."

MITHRAVINTHA

"இம்பாசிபிள்" என்றார் சேது.

"எப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க?"

"நெம்பர் ஒன் காரணம், சென்னைக்கு வந்திருந்தா அவ உங்களைத் தொடர்பு கொள்ளாமல் இருக்கமாட்டா. காரணம் நெம்பர் டூ, சென்னையில் சுபமதி இருந்தா இவ்வளவு நாளில் அவளோட சர்க்கிளில் யாராவது ஒருத்தரின் கண்ணிலாவது படாமல் இருந்திருக்க மாட்டாள்."

நந்தா குறுக்கிட்டு ஆமோதித்தார்.

"நான் சிட்டி பூராவும் அவளைத் தேடி அலசி எடுத்துட்டேன் திலீப். சுபமதி சென்னையில் இல்லைன்னு சர்வ நிச்சயமா சொல்ல முடியும்."

திலீப் தலையசைத்தான்.

"சரி நீங்க சொல்றபடி அவள் சென்னையில் இல்லைன்னு வெச்சிப்போம்... டெல்லியில்தான் இருக்கணும்னு எப்படி உறுதியா சொல்ல முடியும்?"

"சென்னையை அடுத்து அவளுக்கு பழக்கப்பட்ட ஊர் டெல்லிதானே?"

"இங்கே அவளைப் பத்தித் தெரிஞ்சிக்கறதுக்கான ஒரே சோர்ஸ் அவளோட அண்ணன் மற்றும் அண்ணனைச் சேர்ந்தவங்கதான்...அந்த வழியே இப்போ அடைப்பட்டிருக்கு...மேற்கொண்டு அவளை எப்படித் தேடிக் கண்டுபிடிக்க முடியும்?"

கேட்ட திலீப்பைப் பார்த்துப் புன்னகைத்தார் சேது.

"ஒரு சுலபமான வழி இருக்கு."

"என்ன வழி?"

"உங்ககிட்டே சுபமதியோட போட்டோ இருக்கா?"



"அவளும் நானும் சேர்ந்து எடுத்துகிட்ட போட்டோ ஆல்பம் இருக்கு. அதைப் பார்த்துத்தான் இப்ப நான் ஆறுதல் அடைஞ்சிக்கறேன்."

"அதிலிருந்து ஒரே ஒரு போட்டோ கொடுங்க போதும்."

"எதுக்காக போட்டோ...?"

"நியூஸ் பேப்பர்ல விளம்பரம் செய்யலாம் திலீப்... நிச்சயமா நல்ல பலன் இருக்கும். சுபமதி இந்த சிட்டிக்குள்ளே எங்கிருந்தாலும் நமக்கு தகவல் கிடைச்சிடும்."

"மிஸ்டர் சேது...என்னன்னு விளம்பரம் கொடுக்கப் போறோம்?"

"சுபமதியோட போட்டோவைப் போட்டு...இந்த போட்டோவில் உள்ள பெண்ணைப் பார்த்தவர்கள் உடனே தகவல் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி எண்... அப்படின்னு விளம்பரப்படுத்தி இந்த ஹோட்டல் நம்பரைத் தரலாம். தகவல் தருபவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்ன்னு அறிவிச்சா அதுக்கு நல்ல பலன் இருக்கும்ன்னு நினைக்கறேன்."

"எந்த பேப்பர்ல விளம்பரம் கொடுப்பது?"

"டெல்லியில் வெளியாகிற அத்தனை நாளிதழ்களிலும் கொடுத்து வெப்போம். சுபமதியைக் கண்டுபிடிக்கிற வாய்ப்பு எந்த வகையிலும் நம்மை விட்டு நழுவிடக் கூடாது."

"சுபமதி கிடைச்சிடுவாளா மிஸ்டர் சேது?"

ஆர்வம் மின்னும் விழிகளோடு திலீப் கேட்க—

மந்தகாசப் புன்னகையை உதட்டில் தடவிக் கொண்டார் சேது.

"கிடைச்சாகணும்."

MITHRAVINTHA

# 11

நந்தா டீபாய் மேல் மாலைத் தினசரிகளைக் கொட்டினார்.

"அத்தனை பேப்பரிலும் நாம கொடுத்த அறிவிப்பு விளம்பரம் இந்தியிலும், ஆங்கிலத்திலும்... வந்திருக்கு."

சேதுவும், திலீப்பும் அந்தத் தினசரிகளைப் புரட்டிப் பார்த்தார்கள்.

சுபமதியின் பளிச்சென்ற போட்டோ ஜெனிக் முகம் ஆப்செட்டில் அச்சாகியிருந்தது.

அதைப் பார்த்துக்கொண்டே—திலீப் வருத்தத்தைத் தடவிக்கொண்ட குரலில் பேசினான்.

"சுபமதி எத்தனையோ விளம்பரப்படங்களுக்கு மாடலிங்கா போஸ் குடுத்திருக்கா. இப்படி ஒரு விளம்பரத்தில் அவ போட்டோ வரணும்கிறது எவ்வளவு துரதிர்ஷ்டவசமானது."

சேது நந்தாவிடம் திரும்பினார்.

"நந்தா."

"ஸார்."

"ஹோட்டல் ரிசப்ஷனில் சொல்லி வெச்சிட்டீங்களா?"

"சொல்லிட்டேன் ஸார்... விளம்பரத்தில் நாம குடுத்திருக்கிறபடி எக்ஸ்டென்ஷன் நெம்பரோட சேர்ந்து ஹோட்டல் நம்பரை டயல் பண்ணினா நேரா நம்ம ரூமிலேயே ரிங் ஆகும்."

"மாலை பேப்பர் ரிலீசாகி கிட்டத்தட்ட ரெண்டு மணி நேரமாச்சு. இந்தி இங்கிலீஷ்னு ஒண்ணு விடாம



அத்தனை பேப்பரிலும் நாம விளம்பரப்படுத்தி இருப்பதால் சுபமதி டெல்லியில் இருந்தா அவளைப் பத்தி தகவல் இன்னிக்கு ராத்திரிக்குள்ளேயே நமக்கு வந்து சேர்ந்துடும் பாருங்க."

"சேது சொன்னதை ஆமோதிப்பதைப் போல— டெலிபோன் சட்டென மவுன விரதத்தைக் கலைத்துக் கொண்டது.

"நந்தா ரிஸீவரை எடுங்க."

தன்னருகில் இருந்த டெலிபோன் ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தார் நந்தா.

"ஹலோ."

கொச்சையான ஹிந்தியில் மறுமுனை பேசியது.

"பேப்பரில் விளம்பரம் கொடுத்தது நீங்கதானா?"

"ஆமா... சொல்லுங்க."

"நீங்க விளம்பரத்தில் கொடுத்திருக்கிற பொண்ணு நான் குடியிருக்கும் பகுதியில்தான் இருக்கா."

சட்டென்று முகம் மலர்ந்த நந்தா பரபரப்புடன் கேட்டார்.

"ஹலோ...யார் நீங்க... எந்த ஏரியாவில் குடியிருக்கீங்க?"

"ம்...அதை நான் சொல்றதுக்கு முன்னால் எனக்கு சில விஷயங்கள் தெரியணும்."

"என்ன தெரியணும்,"

"அந்தப் பொண்ணுக்கு நீங்க என்ன வேணும்?"

நந்தா மறுமுனைக்காரருக்கு என்ன பதில் சொல்லுவது என்று யோசித்தபடி நின்றிருக்க—

MITHRAVINTHA

சேது அவசரமாய்க் கேட்டார்.

"நந்தா...போன்ல யாரு...? என்ன சொல்றாங்க?"

"அட்வெர்டைஸிங் பார்த்துட்டுக் கூப்பிட்டிருக்காங்க ஸார்...இலங்க ஏரியாவில்தான் சுமதி இருக்காளாம். ஆனா அவளைப் பத்தி விபரம் சொல்றதுக்கு முன்னால இவருக்கு சில விபரங்கள் வேணுமாம்."

"என்ன கேக்கறான் அந்த இடியட்...?"

பரபரப்பில் பல்லைக் கடித்தார் சேது.

"அந்தப் பொண்ணுக்கு நீங்க என்ன வேணும்னு கேக்கறான்..."

"போனை இப்படிக் குடு..."

ரிஸீவரை நந்தாவிடமிருந்து அவசர அவசரமாய்ப் பிடுங்கினார் சேது.

"ஹலோ... நான் சுமதியோட அப்பா பேசறேன்."

"இதுக்கு முன்னால பேசினது?"

"அவளோட சித்தப்பா... ப்ளீஸ்... சுமதி எங்கிருக்கான்னு சொல்லுங்க."

"இருங்க ஸார்...அவ எங்க ஏரியாலதான் பத்திரமா இருக்கா. ஆனா உங்களால அவளுக்கு பிரச்சனை ஆயிடக் கூடாது பாருங்க... அப்பறம் ஒரு பொண்ணைக் காட்டிக் குடுத்த பாவம் என்னைச் சும்மா விடாது. எனக்கு இன்னும் சில விபரங்கள் வேணும்."

"என்ன விபரம் வேணுமோ கேளுங்க, நான் சொல்றேன். நாங்க உடனே சுமதியைப் பார்க்கணும். ப்ளீஸ்."

"எதனால அவ உங்களை விட்டுப் பிரிஞ்சு வந்து தனியா இருக்கான்னு சொல்லுங்க."



"இங்கே பாருங்க...இதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்."

"ஆனா... எங்க குடும்ப விஷயத்தை உங்ககிட்டே சொல்லணும்னு என்ன இருக்கு?"

"பேப்பர்ல விளம்பரம் குடுத்த நீங்களே உங்க குடும்ப விஷயத்தை பப்ளிக் ஆக்கிட்டிங்கன்னு தான் அர்த்தம். நான் கேக்கிற கேள்விக்கெல்லாம் ப்ராப்பரா பதில் சொன்னாத் தான் உங்க பொண்ணு சுமதி இருக்கிற இடத்தை நான் சொல்லுவேன்."

கோபம் கொப்பளிக்க சேது ஒருமைக்குத் தாவினார்.

"என்ன மிரட்டிப் பார்க்கறியா...? அத்தனை பேப்பர்லயும் விளம்பரம் தந்திருக்கேன்... நீ இல்லைன்னா உன் ஏரியாவிலேயே இன்னொருத்தன் போன் பண்ணி என்கிட்டே சொல்லிட்டுப் போறான்."

எதிர் முனையிலிருந்து கடகடவென்று இடிச் சிரிப்புக் கேட்டது.

"என்ன சிரிக்கிறே?"

"நீங்க நினைக்கிற மாதிரி இந்த ஏரியாவிலிருந்து இன்னொருத்தன் போன் பண்ண வாய்ப்பே இல்லை."

"ஏன்...?"

"நீங்க இப்படிப் பத்திரிகையில் விளம்பரம் குடுப்பீங்கன்னு தெரிஞ்சோ என்னவோ...படிக்காத தற்குறிகள் குடியிருக்கும் ஒரு சேரிப் பகுதியில் அவ தங்கியிருக்கா. இங்கிருக்கிற ஜனங்களுக்கு அவங்க வயத்துப்பாட்டைக் கவனிக்கவே நேரம் சரியா இருக்கும். நிதானமா உக்காந்து பேப்பர் படிக்கிற பழக்கமெல்லாம் இந்தப் பகுதி மக்களுக்கு அவ்வளவா இல்லை. நீங்க விளம்பரம் குடுத்த பேப்பர்



MITHRAVINTHA

பழைய பேப்பர் கடைக்கு வந்து சேரட்டுமே... பேல் பூரியோ அவிலே கத்திக் குடுக்கிறப்போதான் இன்னிருக்கிற ஜனங்க அவனை பேப்பர்ல பார்ப்பாங்க, சரி... நீங்க இவ்வளவு ரோஷக்காரரா இருந்தா நான் என்ன செய்யட்டும். போனை வெக்கறேன்.''

அவன் அடைபட்ட தொனியில் சொல்லி முடிக்க—சேது பதட்டத்தோடு கத்தினார்.

''நோ... ரிஸீவரை வெக்காதே... நீ கேக்கிற விபரங்களை நான் சொல்றேன். கமலா எங்கிருக்கான்னு சொல்லு.''

''சொல்றுங்க. என்ன பிரச்சனை காரணமா அவ உங்களை விட்டு ஓடி வந்தா?''

''பிரச்சனை என்னன்னு எங்களுக்கே புரியலைப்பா. என்ன பிரச்சனைன்னு அவளைத்தான் கேக்கணும்.''

''நீங்க சொல்றது நம்பற மாதிரி இல்லையே?''

''நீ நம்பினாலும் நம்பலைன்னாலும் இதுதான் நிஜம்.''

''ஏதாவது காதல் தகராறா? என்கிட்டே ஒப்பனா பேசுங்க.''

''அப்படியெல்லாம் எதுவும் இல்லை. அவ விரும்பப்பட்டவனைக் கல்யாணம் பண்ணிக்க அவளுக்கு எந்தத் தடையும் இல்லை.''

''அப்புறம் என்ன பிரச்சனை?''

''அதான் தெரியலைன்னு சொல்றேனே.''

''சரி தகவல் சொல்றவங்களுக்கு தக்க சன்மானம் அளிக்கப்படும்னு விளம்பரத்தில் போட்டிருக்கீங்களே... சன்மானம் எவ்வளவுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா.''

''உனக்கு எவ்வளவு வேணும் சொல்லு.''



''பத்தாயிரம் ரூபாய்.''

''இட்ஸ் ஓ.கே... அஞ்சாயிரம் ரூபா தர்றேன்.''

அவன் சிரித்தான்.

''ஸார்... நீங்க பேசறது மகளைப் பிரிஞ்ச வேதனையில் இருக்கிறவர் பேசற பேச்சு மாதிரி இல்லை. வியாபாரத்துக்கு ஒரு பொண்ணை ரேட் பேசற மாதிரி இருக்கு. இந்த விளம்பரத்தில் யாராவது பேரம் பேசலாம்னா? நீங்க நிஜமாவே அவளோட அப்பாதானா?''

''டேய்...''

சேதுவுடைய பதட்டத்தையும் வேகத்தையும் பார்த்துப் புருவங்களைச் சுருக்கிய திலீப் அவரிடம் குறுக்கிட்டான்.

''ஸார் என்ன ப்ராப்ளம்?''

''கமலா இருக்கிற இடத்தைத் தெரிஞ்சு வெச்சிகிட்டு சொல்ல மாட்டேங்கறான். நாமா விரும்பிக் குடுக்கறது தான் சன்மானம். ஆனா இவன் டிமாண்ட் பண்றான்.''

சேதுவிடமிருந்து ரிஸீவரை வாங்கினான் திலீப்.

''ஹலோ...''

''குரல் புதுசா இருக்கு? ஒருத்தர் அப்பா... இன்னொருத்தர் சித்தப்பா... நீங்க யாரு பொண்ணுக்கு மச்சானா?''

''இங்கே பாருங்க. கமலாவைக் காணோம்ங்கிற வருத்தத்தில் இங்கே நாங்க துடிச்சிட்டிருக்கோம். எங்க உணர்வுகளைப் புரிஞ்சிக்கங்க.''

''ஸார்... ஒரு பர்ஸைக் கண்டு எடுத்தால் கூட சம்பந்தப்பட்டவங்க கிட்டே அதை ஒப்படைக்கிறதுக்கு முன்னால பர்சோட அடையாளம் கேக்கறோம். ஒரு பொண்ணை

MITHRAVINTHA

ஒப்படைக்கறதுக்கு முன்னால எவ்வளவு தரம் சரி பார்க்கணும்?"

"பணம் கேட்டிருக்காளோ?"

"எவ்வளவு வேணுமோ கேளுன்னு அவர்தான் சொன்னார்...பத்தாயிரம் கொடுக்கன்னு சொன்னதும் ... வாயைத் திறக்கும் பூமிக்குமா குதிக்கிறார்."

"உனக்குப் பத்தாயிரம்தானே வேணும்...நீ கேட்ட பணத்தை நான் தர்றேன்...கடிமை எங்கிருக்கா...ப்ளீஸ்... சொல்லு."

"நான் ஏரியாவைச் சொல்லிட்டா அப்புறம் என்னோட உதவி இல்லாமலே அவளை நீங்க மீட்பீங்க... ஜான்ஸிபிடி பஸ் ஸ்டாண்டுக்கு வாங்க ... அங்கே பஸ் வெளியே வர்ற இடத்தில் நான் காத்திட்டிருக்கேன்... முதல்ல பணம்... அப்புறம் உங்க பொண்ணு."

"உன்னை எப்படி நாங்க அடையாளம் தெரிஞ்சுக்கறது?"

"உங்க அடையாளத்தைச் சொல்லுங்க ... நானே உங்களை வந்து சந்திக்கிறேன்."

"ஒயிட் சூட் போட்டிருப்பேன் ... ரோஸ் கலர் டை...சர்ட்ல ஒரு ரோஸ் குத்தியிருப்பேன்."

"இந்த அடையாளம் போதும்...இன்னும் அரை மணி நேரத்தில் ஜான்ஸிபிடி பஸ் ஸ்டாண்டில் உங்களை எதிர்பார்க்கலாமா?"

"அவ்வளவு நேரம் என்னால தாங்க முடியாது. இன்னும் பத்து நிமிஷத்தில் அங்கே இருப்பேன்." என்றான் திலீப்.



## 12

டெல்லி இன்ட்டர் ஸ்டேட் பஸ் டெர்மினல் அதிக பட்ச பரபரப்பை மொத்தமாய்க் குத்தகைக்கு எடுத்திருந்தது.

அதிர்ந்தபின் வெளவால் கூட்டங்களை உடம்பிலும் நெற்றியிலும் அப்பியிருந்த கார்ப்பொரேஷன் பஸ்கள்—வேற்று மாநில பஸ்கள்—ஒவ்வொரு விநாடிக்கும் வாயில்களில் நுழைவதும்...வெளியேறுவதுமாய் இருந்தன.

சேது...நந்தா...திலீப்...ஆகியோரை அடக்கியிருந்த ஒரு டாக்ஸியைக் கையாளும் டிரைவர் பான்பராக்கை மென்று கொண்டே கேட்டார்.

"ஜி...கிதர் ரோக்னா?"

"அஸிகார் ஜானேவாலி காடியோங்க்கே பாஸ்."

"டீக் ஹை."

சரேலென காரை ஒடித்துத் திருப்பி—அந்த வாயில் அருகே இயக்கத்தை அணைத்தார்.

மூன்று பேரும் டாக்ஸியின் மூன்று கதவுகளை விரித்துக் கொண்டு இறங்கிக் கொண்டார்கள்.

"திலீப் போன ஆசாமியிடம் சொன்ன அதே அடையாளங்களோடு அங்கே காத்திருக்க ஆரம்பித்தான்.

சேது அவனைப் பார்த்துச் சொன்னார்.

"திலீப்...அந்த ஆள் வந்தா பேசிட்டிருக்க...! நான் அந்த ட்யூட்டி பெய்ட் ஷாப் வரைக்கும் போயிட்டு வர்றேன்."

MITHRAVINTHA

நந்தா குறுக்கிட்டார்.

"உங்களுக்கு என்ன வேணும் ஸார்?"

"செரட்."

"நீங்க இருங்க ஸார்...சொன்னா நான் போய் வாங்கிட்டு வர மாட்டேனா?"

"கொஞ்சம் காலார நடக்கணும்னு ஆசைப்படறேன்... நந்தா ஐ டோண்ட் மைண்ட் இஃப் யூ கம் வித் மீ."

திலீப் நந்தாவைப் பார்த்து தலையசைத்தான்.

"நந்தா...நீங்க பாஸுக்கு கம்பெனி குடுங்க."

அகலமான ரோட்டை க்ராஸ் பண்ணிக்கொண்டே சேது சொன்னார்.

"நந்தா."

"நான் செரட் வாங்கறதுக்காக வரலை...உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்...அதுக்கு செரட் ஒரு சாக்கு."

நந்தா நிமிர்ந்தார்.

"என்ன விஷயம்...சொல்லுங்க ஸார்."

"நந்தா ... உங்களைக் கொஞ்சம் அலர்ட் பண்ணி வெக்கறேன். உங்க வேலை சுமதி இருக்கிற இடத்தைக் கண்டுபிடிச்சதுக்கப்புறம்தான் ஆரம்பமாகிறது."

"சுமதியோட இருப்பிடம் தெரிஞ்சதும் ... தலை வாழை இலை போட்டு விருந்து படைக்கிற மாதிரி... அவளை உங்ககிட்ட ஒப்படைக்கணும்...அவ்வளவுதானே ஸார்...? என்னோட வேலையை நான் சரியா செஞ்சிடுவேன்."

"திலீப்புக்கு சந்தேகம் வராத வகையில் நாம அந்தக் காரியத்தைச் செய்யணும்."



"அதையெல்லாம் நான் பார்த்துக்கறேன் ஸார்."

"இந்த தைரியமான வார்த்தைக்காகத்தான் உங்களை இங்கே கூப்பிட்டுவிட்டேன்."

அந்த ட்யூட்டி பெய்ட் ஷாப்பின் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்ற சேது—ஒரு வெளிநாட்டு செரட் பெட்டியை வாங்கிக் கொண்டு—வெளியே வந்தார்.

லைட்டரின் உதவியால் செரட்டைப் பற்ற வைத்துக் கொண்டே—மீண்டும் திலீப் நின்றிருந்த இடத்துக்கு வந்தார்.

நந்தா கேட்டார்.

"திலீப்...அந்த ஆள் வந்துட்டானா?"

"இன்னும் காணோமே?"

அவன் கவலையோடு சொன்னபோது—ஒரு தடிமனான குரல் அவர்களுக்குப் பின்னால் கேட்டது.

"ஹலோ...விளம்பரப் பார்ட்டியா?"

திரும்பினார்கள்

செக்கச் சிவப்பாய் ... உயரமாய்...இருந்த அந்த ஆசாமி அந்த அரைகுறை வெளிச்சத்தில் கறை படிந்த பற்களைக் காட்டிச் சிரித்தான்.

கையில் மாலை நாளிதழை சுருட்டிப் பிடித்திருந்தான்.

"நான் தான் உங்களுக்கு போன் பண்ணினேன்."

திலீப் அவனைப் பார்த்துப் பரபரத்தான்.

"சுமதி எங்கிருக்கா?"

"பணம்?"

MITHRAVINTHA

...பாக்கெட்டிலிருந்து எடுத்து அந்த ஆசாமியிடம் தாள்களைக் காட்டினான் திலீப்.

"நீ கேட்ட பணம் தயாரா இருக்கு...என்னை முதல்ல சுவாமி கிட்டே கூட்டிட்டுப் போ."

"பணத்தைக் குடுங்க ஸார்...அங்கே போய் ஆளைப் பார்த்ததுக்கப்புறம் உங்க மனசு மாறிடுச்சின்னா என்ன பண்றது சொல்லுங்க."

சேது கோபத்தோடு அவனைப் பார்த்தார்.

"என்னைப் பார்த்தா அப்படி ஏமாத்தற ஆட்கள் மாதிரியா தெரியுது?"

அவன் இளித்தான்.

"உங்க ஒரு ஞாபகம் இருக்கு...நீங்க தானே அந்தாளைப் பார்த்து பேரம் பேசினது...சத்தியமா உங்களைத்தான் என்னால நம்ப முடியாது."

திலீப் அவன் நோட்டுக்களை அவனிடம் நீட்டினான்.

"இந்தா நீ கேட்ட பணம்...உனக்கு என்ன வேலை நம்பிக்கை இல்லைன்னா நீ இப்பவே இந்தப் பணத்தை வாங்கிக்கலாம்."

சேது குறுக்கிட்டார்.

"திலீப்...அவசரப்படாதீங்க...இவன் முதல்ல ஆளைக் காட்டட்டும்."

அந்த ஆசாமி விழித்துக் கொண்டான்.

"ஸார்...நீங்க மூணு பேரும் என்னைக் கூப்பிட்டு வெச்சு இன்ஸல்ட் பண்றீங்க...என்னை நீங்க நம்பலைன்னா பரவாயில்லை...நீங்க யாரையோ வெச்சு அந்தப் பொண்ணைத் தேடிக்கங்க...எனக்குப் பணம் வேண்டாம்...நான் என்னோட பொழப்பைப் பார்க்கப் போறேன்."



நகர்ந்து செல்ல ஆரம்பித்த அவனைத் தடுத்தான் திலீப்.

"ப்ளீஸ் நில்லு."

அவனைத் தடுத்த கையோடு சேதுவிடம் திரும்பிச் சொல்ல ஆரம்பித்தான்.

"மிஸ்டர் சேது...கொடுக்கிற பணத்துக்கு என்ன செக்யூரிட்டி இருக்குன்னு அதிகப்படியா யோசிக்கறதுக்கு இது பிஸினஸ் இல்லை...கமலாவை நான் பார்த்தாகணும்...கமலா இருக்கிற இடம் இவனுக்குத் தெரியும்...இவன் சொல்றபடியெல்லாம் நாம ஆடித்தான் ஆகணும்."

அந்த நூறு ரூபாய் நோட்டுக்களை அவனிடம் நீட்டி விட்டுச் சொன்னான்.

"நீ கேட்ட பணத்தை நான் கொடுத்துட்டேன்."

"ஒரு டாக்ஸி பிடிங்க ஸார்...நான் கூட்டிட்டுப் போறேன்."

அந்தப் பணத்தை பைஜாமா பாக்கெட்டுக்குள் பத்திரப் படுத்திக் கொண்டே மூஞ்சி பூராவும் சந்தோஷத்தை ஒட்ட வைத்துக்கொண்டு சொன்னான் அவன்.

நந்தா குறுக்கே போன டாக்ஸியை அழைக்க—அது அரை வட்டமடித்துத் திரும்பி அவர்களை உரசினாற் போல வந்து நின்றது.

நால்வரும் டாக்ஸிக்குள் ஏறிக்கொண்ட பின் டிரைவர் கேட்டார்.

"கிதர் ஜானா?"

திலீப் அந்த ஆசாமியைப் பார்த்தான்.

"எங்கே போகணும்...சொல்லு."

"சவேரி பஜாருக்கும் பின்னாலிருக்கிற சேரிக்குப் போ."

டாக்ஸி விரைய ஆரம்பித்தது.

"சிட்டி ஆயி ஹை."

ஆயிஹை சிட்டி ஆயிஹை."

டாக்ஸிக்குள் இருந்த ஸ்பீக்கர்கள் பங்கஜ் உதாஸின் கஜல் பாடலை மெல்லிய டெஸிபலில் முணுமுணுக்க ஆரம்பித்தன.

கம் காத்தே ஹை...

கம் சோத்தே ஹை...

பஹாரோத் ஜியோதா...

ஹம் ரோத்தே ஹை...

திலீப் அப்போது இருந்த மனநிலைக்கு அந்த ஹிந்திப் பாடலின் அர்த்தம் முழுசாகத் தெரிந்திருந்தால் அழ ஆரம்பித்திருப்பான்.

மவுனமான பத்து நிமிஷப் பயணத்தின் முடிவில்—ஒரு சேரிப்பகுதிக்குள் கார் குலுங்கலாய்ச் செல்ல ஆரம்பித்தது.

சேரியின் மத்தியப்பகுதிக்கு வந்தபோது—அவன் குரல் கொடுத்தான்.

"இங்கேதான்...நிறுத்து."

டாக்ஸி வேகம் குறைந்து அவன் சொன்ன இடத்தில் நின்று விட்டது.

காரின் கதவைத் திறந்து இறங்கி அந்த ஆசாமி—இறங்கிய வேகத்திலேயே அவர்களிடம் எதுவுமே சொல்லிக் கொள்ளாமல்...சட்டென்று அந்த சேரிச் சசகசப்புகளுக்குள் புகுந்து ஓடி மறைந்து விட்டான்.



சேது கத்தினார்.

"ஏய்...ஏய்."

நந்தா படபடத்தார்.

"ஸார்...அவன் நம்மை ஏமாத்திட்டான்னு நினைக்கிறேன்."

"நந்தா...எங்கே போயிடப் போறான்...இந்த சேரியை அலசிப் பார்த்துடலாமா?"

"இந்த ராத்திரி வேளையில எங்கே ஸார் தேடுவீங்க."

"திலீப்...பணத்தைக் குடுக்காதிங்கன்னு சொன்னேனே கேட்டீங்களா?"

டாக்ஸி டிரைவர் அவர்கள் மூன்று பேரையும் பொதுவாய்ப் பார்த்துக் கேட்டார்.

"அவன் உங்ககிட்டே எதையாவது சொல்லி பணம் வாங்கினானா ஸார்?"

"ஆமா."

"அவன் ஒரு ஃப்ராடு... பஸ் ஸ்டாண்ட் பக்கம் வர்ற வெளியூர்க்காரங்ககிட்டே எதையாவது சொல்லி பணத்தை வாங்கிட்டு அவங்களை இந்தச் சேரிப்பக்கம் கூட்டிட்டு வந்து நழுவிப் போயிடுவான்."

"டேம் இட்... ஏம்ப்பா இதை நீ ஏன் முதல்லயே சொல்லலை?"

"ஸார்... நீங்க என்னிக்காவது வர்றீங்க... ஏமாந்துட்டுப் போறீங்க. நான் தினம் தினம் இந்த மாதிரி ஆளுங்களைப் பார்க்க வேண்டியிருக்கு... காட்டிக் குடுத்தா என்னைத் தீர்த்துடுவான்க... அவனைப் பிடிக்கமுடியாது... பிடிச்சாலும் ஒத்துக்க மாட்டான்... உங்களை இதுவரைக்

MITHRAVINTHA

தும் பார்த்ததே இல்லைன்னு சாதிப்பான்... உங்க பணம் போனது போனதுதான்."

சேதுவும், நந்தாவும் திகைத்துப் போய் டாக்ஸி டிரைவரைப் பார்த்தார்கள்.

சேது திலீப்பிடம் திரும்பினார்.

"திலீப்... உங்க பணம் பத்தாயிரம் போச்சு."

திலீப்புக்கு பணம் போனது பெரிதாய்த் தெரியவில்லை. சுபமதி எங்கே?

இந்தக் கேள்விதான் அவன் இருதயச் சுவர்களை ஒரு கூர்மையான பிளேடைப் போலக் கிழித்து ரணமாக்கிக் கொண்டிருந்தது.

## 13

அன்றைய இரவு ஒரு தூக்கமில்லாத இரவாகக் கழிந்து போயிருக்க— காலை எட்டு மணிக்கு டெலிபோன் சத்தம்தான் திலீப்பை எழுப்பியது.

ட்ரி...

ட்ரி...

ட்ரி...

ட்ரி...

தீயைப் போல எரியும் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டே புரண்டு படுத்து— ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ."



"நேத்திக்கு சாயந்தர பேப்பர்ல நீங்க குடுத்திருந்த விளம்பரத்தைப் பார்த்தேன்."

"உங்களுக்கு எவ்வளவு பணம் வேணும்?"

திலீப் வெறுப்போடு கேட்க— மறுமுனைக்காரர் தன் குரல் நிறைய ஆச்சர்யத்தைக் கொட்டினார்.

"ப...பணமா?"

"ஆமா... நேத்திக்கு ராத்திரிதான் ஒரு ஆள் எங்களுக்கு போன் பண்ணி விளம்பரத்தில் நாங்க கொடுத்திருக்க அந்தப் பொண்ணு இருக்கிற இடத்தைக் காட்டறேன்னு சொல்லி பத்தாயிரம் ரூபா பணத்தைப் பிடுங்கிட்டு ஏமாத்திட்டான்."

"சிபலி பேதடிக்... நான் பணத்துக்காக உங்களுக்குப் போன் பண்ணலை. தகவல் குடுக்கணும்கிற நிஜமான அக்கறையோட பேசறேன்."

"எங்கிருந்து பேசறீங்க?"

"லேபர்ன் காலனில நான் குடியிருக்கேன். அந்த விளம்பரத்தைப் பார்த்ததும் நேத்திக்கு ராத்திரியே நான் உங்களுக்குப் போன் பண்ணிப் பார்த்தேன். ஆனா ரிங் ஆயிட்டே இருந்தது. யாரும் போனை எடுக்கலை."

"ராத்திரி ஏழரை அல்லது எட்டரை மணி இருக்குமா?"

"ஆமா. நான் போன் பண்ணறப்ப சரியா மணி எட்டு பத்து."

திலீப் இன்னும் வெறுப்பை இழக்காத குரலில் சொன்னான்.

"அந்தச் சமயத்தில்தான் நாங்க அந்த ராஸ்கல்கிட்டே ஏமாறறதுக்காகப் போயிருந்தோமே. பணத்தை இழந்தது பெரிசில்லை. சுபமதியைப் பார்க்கப் போறோம்னு

எவ்வளவு நம்பிக்கையோட அவன் கூடப் போனேன். அந்த நம்பிக்கை தகர்ந்து போனதுதான் பெரிய ஏமாற்றமா இருந்தது.''

''உங்க வருத்தம் எனக்குப் புரியுது.''

''மிஸ்டர், நீங்க யார்ன்னு எனக்குத் தெரியாது. நீங்களும் என் மன உணர்வுகளோட விளையாடலையே? சுபமதி விஷயத்தில் இன்னொரு தடவை ஏமாற்றம் கிடைச்சா உடைஞ்சு போயிடுவேன். என்னோட நம்பிக்கையைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிற விளையாட்டுக்கு நான் வரலை. அப்படி ஏதாவது இருந்தா தயவு செஞ்சு விட்டுடுங்க.''

''யாரோ பணத்துக்காக நேத்திக்கு உங்களை ஏமாத்திட்டாங்க போலிருக்கு. நான் சீரியசா உங்ககிட்ட பேசிட்டிருக்கேன். நீங்க விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்த மாதிரி எந்த சன்மானத்தையும் எதிர்பார்த்து நான் தகவல் சொல்லலை.''

''ப்ளீஸ் சொல்லுங்க. சுபமதி எங்கே இருக்கா?''

''போட்டோவில் நீங்க போட்டிருந்த அந்தப் பொண்ணு பேர் சுபமதியான்னு எனக்குத் தெரியாது. ஆனா அந்தப் பொண்ணை போன வாரம் நான் பார்த்தேன்.''

''எங்கே பார்த்தீங்க?''

''மதர் தெரஸா பாலி க்ளினிக்கில்.''

''எங்கே?''

''பிரசவத்துக்காக மகளைச் சேர்த்திருந்த ஆஸ்பிட்டலில்.''

''ஆ...ஆஸ்பத்திரியிலா சுபமதியைப் பார்த்தீங்க! சுபமதிக்கு என்னாச்சு?''



''அந்த ஹாஸ்பிட்டலில் அந்தப் பொண்ணை நான் பேஷண்ட்டா பார்க்கலை.''

''பின்னே?''

''அவ அங்கே நர்சா இருந்தாள். என்னோட மகள் உட்பட எல்லா பேஷண்ட்களையும் ரொம்பப் பக்குவமா பாத்துகிட்டா. அந்தப் பொண்ணோட முகத்தைப் பார்த்தாலே பாதி வியாதி குணமாயிடும். அந்தப் பொண்ணோட சேவை மனசிலேயே தங்கிட்டதால முகத்தையும் அவ்வளவு சுலபத்தில் மறக்க முடியலை. விளம்பரத்தில் போட்டோ பார்த்ததும் சட்ன்னு ஞாபகம் வந்துடுச்சு.''

''தாங்க்யூ ஸார். தாங்க்யூ வெரிமச். நீங்க குடுத்த தகவல் உண்மையா இருந்தா உங்களுக்கு நான் ஆயுள்காலம் முழுவதும் நன்றிக்கடன் பட்டவனா இருப்பேன். உங்க அட்ரஸைச் சொல்லுங்க ப்ளீஸ்.. நான் சுபமதியோட வந்து உங்களுக்கு ஏதாவது செய்யணும்.''

''ஸாரி...நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே எதையும் எதிர்பார்த்து நான் இந்த உதவியைச் செய்யலை. என்னோட தகவல் உங்களுக்கு உபயோகமா இருந்திருந்தா அதுவே போதும்...''

திலீப் அவரை வற்புறுத்த முனையும்போது— மறு முனைக்காரர் தொடர்பை அறுத்துக் கொண்டு விட்டார்.

போர்வையை உதறிக் கொண்டு திலீப் எழுகின்ற போது—அறைக் கதவு தட்டப்பட்டது.

''தட்...''

''தட்...''

''தட்...''

குமிழைத் திருகி லாக்கை விடுவித்தான்.

MITHRAVINTHA

நந்தா உன்னே அழைத்தார்.

"குட்மார்னிங் மிஸ்டர் திலீப்."

"வெரி குட்மார்னிங்."

"என்ன உற்சாகமா இருக்கீங்க? ஊருக்கு காலை வந்ததா?"

"இப்ப சொன்னாக் ... வந்தது—கமலி எங்கே இருக்காங்கன்னு தெரிஞ்சிடுச்சு."

"இஸ்?"

திலீப் நந்தாவிடம் சற்று முன் வந்த டெலிபோன் கால் பற்றி விபரமாகச் சொன்னான்.

நந்தா புன்னகைத்தார்.

"டைம் ... இதுவும் புன்னகையாகப் போயிடப் போகுது திலீப்."

"இல்லை அப்படிப் போகாது."

"எப்படி இவ்வளவு உறுதியா சொல்றீங்க?"

"தகவல் கொடுத்தவர் ரொம்ப நம்பிக்கைக்கு உரியவராய்த் தெரிஞ்சார்...அவர் பணத்தைப் பேசவே நினைக்கலை."

"அந்த ஆஸ்பிட்டலுக்கு எப்பப் போகப் போறீங்க?"

"பத்து நிமிஷம் ... நின்னுட்டு நேரா மதர் தெரஸா பாலி க்ளினிக்தான். இந்த சந்தோஷமான விஷயத்தை உங்க பாஸ் சேதுபதிட்டேயும் சொல்லுங்க."

"அவரையும் ரெடியா இருக்கச் சொல்றேன். நாம மூணு பேருமே போகலாம்."

"இட்ஸ் மை ப்ளஷர்."



அடுத்து வந்த நிமிஷங்கள் எல்லாமே திலீப்புக்கு உற்சாக நிமிஷங்களாகவே கழிந்து கொண்டிருந்தன.

சரியாய் இருபது நிமிஷங்களில் புறப்பட்டு ஹோட்டல் அறையை விட்டு வெளியே வந்தான்.

நந்தா ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்திருந்தார்.

மூவரும் உள்ளே ஏறிக்கொண்டு— ஆஸ்பிட்டல் பெயரைச் சொல்ல—கார் விரைய ஆரம்பித்தது.

❀ ❀ ❀

மதர் தெரஸா பாலி க்ளினிக் விஸ்தாரமான இடப் பரப்பை பிடித்துக் கொண்டு—நகரின் இதயப் பகுதியில் உட்கார்ந்திருந்தது.

ப்ளாக் ப்ளாக்காய் ஆஸ்பத்திரியின் பல பிரிவுகள்.

ஜெனரல்.

ஐ.

லேபர்.

கார்டியாலஜி.

ரேடியோகிராஃபி.

ஆர்த்தோ.

ஆப்தோ.

சிறப்புகளை நோக்கி நடந்து கொண்டே— சேது ஆச்சரியப்பட்டார்.

"பெரிய ஹாஸ்பிட்டலா இருக்கும் போலிருக்கே?"

"இங்கே கமலியை எங்கே போய்த் தேடறது?"

"லேபர் வார்டில் விசாரிக்கலாம்."

நீ—6

MITHRAVINTHA

"அதென்ன பார்ட்டிக்குலரா லேபர் வார்டு?"

"அந்தப் பெரியவர் தன்னோட மனைவி பிரசவத்துக்காக சேர்த்திருந்தப்போதான் சுபமதியைப் பார்த்திருக்கார்...ஸோ...அவள் லேபர் வார்டில்தான் இருக்கணும்."

"சுபமதியைப் பார்க்கப் போற சந்தோஷத்தில் நீங்க இருக்கீங்க திலீப். ஆனா எனக்குள்ளே உறுத்தலா சில கேள்விகள் இருக்கு."

திலீப் நிமிர்ந்து சேதுவைப் பார்த்தான்

"என்ன சொல்றீங்க?"

"மாடலிங் பண்ணிட்டிருந்த சுபமதி, சம்பந்தமே இல்லாத நர்சிங் ப்ரொஃபஷனுக்கு எப்படி வந்தாள்?"

"அதான் எனக்கும் புரியலை."

"அவ ஏன் உங்களை விட்டு...மாடலிங் துறையை விட்டு சென்னையை விட்டு ஒதுங்கி இங்கே வந்திருக்கா?"

"அதுவும் புரியலை?"

"இவ்வளவு புரியலைகளை வெச்சுகிட்டு எந்த அடிப்படையில் நீங்க சந்தோஷப்படறீங்க?"

திலீப்பின் முகம் சட்டென்று சுருங்கிப் போனது.

"மிஸ்டர் சேது...சுபமதி எங்கே இருக்காள்னு தெரிஞ்சுகிட்ட சந்தோஷத்தில் இந்த மாதிரி அறிவுபூர்வமான கேள்விகள் எனக்குத் தோணலே இல்லை... அவளைப் பார்க்க போறோம்ங்கற சந்தோஷமே எனக்குப் பெரிசா இருந்தது."

"பார்ப்போம். அவளை நேரில் பார்த்துட்டா எல்லா சந்தேகங்களும் தெளிஞ்சிடும்."



ரிசப்ஷனிஸ்ட்டிடம்—கேட்டார்கள்.

"இந்த ஹாஸ்பிட்டலில் நர்சா இருக்கிற சுபமதிங்கற பொண்ணை நாங்க பார்க்கணும்."

"எந்த வார்டில் வேலை பார்க்கிறாங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"லேபர் வார்டுன்னு நினைக்கிறேன்."

"ஒன் மினிட்."

தன்னிடமிருந்த கம்ப்யூட்டரைத் தட்டிப் பார்த்துவிட்டு அந்த ரிசப்ஷனிஸ்ட் பெண் உதடுகளைப் பிதுக்கினாள்.

"அப்படி யாரும் லேபர் வார்டில் இல்லையே..."

"சுபமதி லேபர் வார்டில்தான் வேலை பார்க்கிறான்னு எங்களுக்கு சரியாத் தெரியாது. வேற செக்‌ஷனில் கூட இருக்கலாம். ப்ளீஸ்...உங்க கம்ப்யூட்டர் டேட்டா பேஸில் சர்ச் பண்ணிப் பாருங்க."

அவள் மீண்டும் கீ போர்டைத் தட்டினாள்.

சில விநாடிகளுக்குப் பின்— முன்பு போலவே உதட்டைப் பிதுக்கினாள்.

"ஸாரி...சுபமதின்னு நர்ஸ் யாரும் இல்லையே"

திலீப் தவிப்புடன் அவளிடம் சொன்னான்.

"இங்கே அவ வேலைக்கு சேர்ந்து ஒரு மாசம்தான் இருக்கும். அவ போட்டோ என்கிட்டே இருக்கு. பார்த்து சொல்றீங்களா."

அந்தப்பெண் புன்னகைத்தாள்.

"போட்டோ வேண்டாம். ஒரு வேளை புது அப்பாயின்மென்ட்ங்கறதால கம்ப்யூட்டர் டேட்டா பேஸில் இன்னும்

MITHRAVINTHA

சேர்க்காம இருக்கலாம். நீங்க தேடி வந்த பொண்ணு லேபர் வார்டுலதான் இருக்கான்னு உறுதியாத் தெரிஞ்சா நீங்க அங்கே போய் மேலும் செய்ய வேண்டியதைச் செய்யப் பண்ணலாம் பாருங்க."

"லேபர் வார்டு எங்கிருக்கு?"

அவள் வழி சொன்னாள்.

லேபர் வார்டை நோக்கிச் செல்ல ஆரம்பித்தபோது—திலீப்பை சற்றே முன்னால் போகவிட்டு—நந்தா சேதுவின் கையை அழுத்தினார்.

"ஸார்."

"என்ன நந்தா?"

"இப்ப நாம கூட போகணுமா."

"ஏன்?"

"அவ இங்கே இருக்காளான்னு உறுதிப்படுத்திக்கறது தான் நம்ம நோக்கம். உங்களைப் பார்த்தா மறுபடியும் அவ பத்திரெரிய ஆரம்பிச்சிடுவா. திலீப் முன்னால கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணி நம்ம மானத்தை வாங்கினாலும் வாங்கிடுவா. நாம சைலண்ட்டா கழண்டுக்குவோம். கமலி இங்கே இருக்கான்னு தெரிஞ்சதுக்கப்புறமா தனி ட்ராக்கில் நாம நம்ம வேலையைத் துவங்கலாம்."

நந்தாவின் யோசனை சரி எனப்பட்டது

சேது கூப்பிட்டார்.

"திலீப்."

அவன் நின்றான்.

"என்ன ஸார்?"



"கமலி நீங்க ரொம்ப நாளைக்குப் பிறகு பார்க்க நீங்க. உங்ககிட்டே அவ பேசறதுக்கோ... அவகிட்ட நீங்க பேசறதுக்கோ பர்சனலா எவ்வளவோ விஷயம் இருக்கலாம். அப்படி மாதிரி நானும் நந்தாவும் குறுக்கே நிக்கறது அவ்வளவு சரியா இருக்காது."

"அதனால என்ன ஸார்."

"இப்படிக் கேக்கறது உங்க நாகரிகப் பண்பைக் காட்டுது. இப்படி நீங்க சொன்னாலும் ஒதுங்கி நிக்குறதுதான் எங்களுக்கு நாகரிகம். நாங்க கமலிகிட்டே பின்னால்தானே பேசப்போறோம். இருக்கிற இடத்தைத் தெரிஞ்சிகிட்டா எப்ப வேணா பேசிக்கலாம். அதனால நீங்க மட்டும் லேபர் வார்டுக்குப் போங்க."

திலீப் தோள்களைக் குலுக்கி புன்னகைத்தான்.

"ஓக்கே."

ரிசப்ஷனிஸ்ட் சொன்ன வழியைத் தொடர—சிவப்பு நிற அம்புக்குறி லேபர் வார்டைக் கை காட்டியது.

"அங்கே சிரிஞ்சில் மருந்தை நிரப்பிக் கொண்டிருந்த நர்ஸிடம் ஆங்கிலத்தில் குறுக்கிட்டான் திலீப்,

"எக்ஸ்க்யூஸ் மீ."

"எஸ்."

"நான் கமலியைப் பார்க்க வேண்டும்."

"கமலியா?"

"எஸ்."

அவள் நெற்றிப்பரப்பு சுருங்கியது.

"அப்படி யாரும் இங்கே இல்லையே?"

"புதிதாக வேலைக்கு சேர்ந்திருக்கிறாள்."

அந்த நர்ஸ் பெண் யோசித்துக் கொண்டிருக்கிற போதே—வராந்தாவில் நடந்து வரும் அவளைப் பார்த்து விட்டான் திலீப்.

ஆர்ப்பரிக்கும் அலைகளைப் போல அவனுக்குள் ரத்த அழுத்தம் குப்பென்று உயர்ந்தது.

கூப்பிட்டான்.

"சுமதி!"

அவள் எந்த ரியாக்ஷனும் இல்லாமல் வந்து கொண்டிருந்தாள்.

அவளிடம் ஓடிச் சென்றான் திலீப்.

"சுமதி."

இன்னமும் அவளிடம் எந்தச் சலனமும் இல்லை.

அவனுக்குப் பின்னே நடந்து வரும் யாரையோ அவன் கூப்பிடுகிறான் என்கிற மாதிரித்தான் அவள் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

திலீப் பதட்ட மூச்சு வாங்க அவளுக்கு எதிரே நின்று கத்தினான்.

"சுமதி... நீ... இங்கே என்ன பண்றே?"

கேட்டவனை பரிச்சயமே இல்லாத பார்வையால் பார்த்த அவள் நிதானமாய்க் கேட்டாள்.

"யார் நீங்க? உங்களுக்கு என்ன வேணும்?"

"சுமதி?"

"நான் சுமதி இல்லை...மைதிலி" என்றாள்.



## 14

சற்றே தள்ளி மறைவாய் நின்று நடக்கிற சம்பவத்தைக் கவனித்துக் கொண்டிருந்த சேது மற்றும் நந்தாவிடம் வியப்பு குடியேறியது.

"என்ன சார்... இவ நான் மைதிலிங்கறா?"

"ரெட்டைப் பிறவிகளா இருக்குமோ?"

அவர்கள் குழப்பமாய் நின்று பார்த்துக் கொண்டிருக்க—அங்கே திலீப் அதிர்ச்சியுடன் அவளை ஏறிட்டான்.

"சுமதி...நீ என்கிட்டே விளையாடறேன்னு நினைக்கிறேன்."

அந்தப்பெண் சீரியஸான முகத்தோடு நிமிர்ந்தாள்.

"நான் ஏன் உங்க கிட்டே விளையாடணும்...? நீங்க தான் இப்போ என்னை வழிமறிச்சு விளையாடிட்டிருக்கீங்க. எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கு. என்னோட பொறுப்பில் இருபது முப்பது பேஷண்ட் இருக்காங்க. உங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டா வார்டு டாக்டரைப் போய்க் கேளுங்க. என்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம்."

அவளுடைய கோபத்துக்கு விதிர்த்துப் போன திலீப்—மெதுவாகச் சொன்னான்.

"அ...ஐயாம் வெரி ஸாரி...சுமதிங்கற என்னோட வுட்பி ஒய்ஃபைத் தேடி நான் இங்கே வந்தேன். அவ உங்களைப் போலவே இருப்பாள். ஷி ஈஸ் ஏ மாடலிங் கேர்ள். என்கிட்டே அவளோட போட்டோஸ் கூட இருக்கு. அதைப் பார்த்தீங்கன்னா உங்களுக்கு விஷயம் புரியும்."

MITHRAVINTHA

அவனை ஒரு விநாடிக்கு ஏற இறங்கப் பார்த்த அந்த மைதிலி சொன்னாள்...

"என்னவா இருந்தாலும் சரி... நீங்க ட்யூட்டி டயத்துல என்னை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம் ப்ளீஸ்."

சொல்லிவிட்டு அவள் நகர்ந்து சென்றுவிட—திலீப் ஒரு சிலையைப் போல அந்த இடத்திலேயே வெகு நேரத்துக்கு உறைந்து போய் நின்றுவிட்டான்.

"திலீப்."

சேதுவும், நந்தாவும் பின்னால் வந்து அவன் தோளைத் தட்டினார்கள்.

திரும்பினான்.

"வார்...இவ நான் சுபமதி இல்லை...மைதிலின்னு சொல்றா."

"நாங்களும் கேட்டுட்டுத்தான் இருந்தோம்."

"எ...என்னால நம்பவே முடியலை. இப்படி அச்சு அசலா ஒருத்தரைப் போலவே இன்னொருத்தர் இருப்பாங்களா...? அது சாத்தியம்தானா?"

"இந்த வார்டு டாக்டரை விசாரிச்சா இவ சுபமதியைப் போலவே இருக்கிற வேற ஒரு பொண்ணா, இல்லை சுபமதிதான் நடிக்கிறாளான்னு உண்மை தெரிஞ்சிடும்."

வார்டின் கோடியில் இருந்த டாக்டரின் அறையை நெருங்கினார்கள்.

"எக்ஸ்க்யூஸ் மீ டாக்டர்."

"கமின்."

உள்ளே செல்ல—இலவம்பஞ்சு நிறத்தில் தலைக்கேசத்துடன் ரிட்டயராகப் போகும் வயதில் ஒரு டாக்டர் உட்கார்ந்திருந்தார்.



அவர் காட்டிய இருக்கைகளில் அமர்ந்து கொண்டே—நாங்கள் வந்த விஷயத்தை சுருக்கமாய் விவரித்தார்கள்.

அவர் ஆச்சர்யத்தோடு நெற்றியை உயர்த்தினார்.

"நான் மைதிலியைப் போலவே ஒரு பொண்ணு இருக்காளா?"

அவருடைய கேள்விக்கு பதிலாக சேது இன்னொரு கேள்வியை எழுப்பினார்:

"அல்லது சுபமதிதான் மைதிலிங்கற போர்வையைப் போர்த்திகிட்டு நடிக்கிறாளான்னு தெரிஞ்சிக்க விரும்பறோம்."

அந்த டாக்டர் அவசரமாய்த் தோளைக் குலுக்கினார்.

"நெவர்...மைதிலியை எனக்கு ஒரு வருஷம் ரெண்டு வருஷம் இல்லை அஞ்சு வருஷமாத் தெரியும். சின்சியர் அண்ட் டேலண்ட்டட் நர்ஸ்."

"அஞ்சு வருஷமா மைதிலி இந்த க்ளினிக்கில்தான் வேலை செய்யறாங்களா?"

"இல்லை இந்த க்ளினிக்கின் பிராஞ்ச் நிறைய இடங்களில் இருக்கு. அவள் பஞ்சாப் ஹிமாலயான்னு பல இடங்களில் வேலை பார்த்திருக்கா. போன மாசம்தான் இங்கே டிரான்ஸ்பர் ஆகி வந்திருக்கா."

அவர்கள் மௌனமான யோசனைகளோடு அமர்ந்திருக்க டாக்டர் கேட்டார்.

"வேற ஏதாவது என்கிட்ட கேக்க வேண்டியிருக்கா?"

"நோ டாக்டர். தாங்க்யூ வெரி மச்."

"நானும் ரவுண்ட்ஸ் போகணும்."

MITHRAVINTHA

சொல்லிக்கொண்டே ஸ்டெத்தை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்ட—டாக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்த மூன்று பேரின் மனசுக்குள்ளும் விதவிதமான வர்ணங்களில் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

* * *

ஹோட்டல் அறையில் செயலற்றுப் போய்ப் படுத்திருந்தான் திலீப்.

அடுத்து என்ன செய்வது என்று புரியாத குழப்பம் அவனை அடித்துப் போட்டிருந்தது.

இவள் மைதிலி என்றால் சுமதி எங்கே? அந்த ஃப்ராடு பேர்வழி தந்த ஏமாற்றம் ஒரு வகை என்றால்—இது இன்னொரு வகை ஏமாற்றம்.

கடைசியில் ஆரம்பித்த இடத்துக்கே வந்திருக்கிறோம்.

அவனுக்குள் தீவிரமாய் சிந்தனைகள் சுமதியை சுற்றி சுற்றி வந்தன.

டெலிபோன் கூப்பிட்டது.

"ஹலோ."

மறுமுனையிலிருந்து பாண்டித்துரையின் குரல் நிட்சயமாய்க் கேட்டது.

"ஹலோ... திலீப்."

"சொல்லுங்கப்பா நான் திலீப்தான் பேசறேன்."

"நீ டெல்லிக்கு கிளம்பிப் போய் சரியா அஞ்சு நாள் ஆச்சு."

"சீக்கிரம் வந்துடறேன்ப்பா."



"சீக்கிரம்ன்னா எப்போ? உன் தலைமேல எவ்வளவு பொறுப்புகள் இருக்கு. உன்னை அலட்சியப்படுத்திட்டுப் போன பொண்ணுக்காக அதையெல்லாம் தட்டிக் கழிச்சிட்டு இன்னும் எத்தனை நாளைக்கு நீ டெல்லியில் உட்கார்ந்திருப்பே?"

"அப்பா."

"சரி...இந்த அஞ்சு நாள் டெல்லியில் இருந்தியே... அவளைப் பார்த்தியா...? பேசினியா?"

"அவ எங்கே இருக்கான்னே தெரியலைப்பா."

"இட் சவுண்ட் ரிடிகுலஸ். அவ அட்ரஸை வாங்கிட்டுத் தானே டெல்லிக்குக் கிளம்பினே?"

"ஆமா. ஆனா இங்கே நடந்த அசம்பாவிதங்கள் பத்தி நேத்திக்கு ராத்திரிக்கு உங்களுக்கு போன் பண்ணிச் சொன்னேனே."

"சொன்னே. அவளோட அண்ணா அண்ணி இறந்துட்டாங்க...வீட்டைக் காலி பண்ணிட்டாங்க. சுமதி மட்டும் எங்கே போனான்னு தெரியலைன்னு சொன்னே அட்ரஸ் இல்லாமப் போயிட்ட அவளை டெல்லியில் எப்படித் தேடுவேன்னு நான் கேட்டப்ப நியூஸ் பேப்பர்ல விளம்பரம் குடுத்திருக்கேன்னு சொன்னே ... அதுக்குப் பலன் இருந்ததா?"

"இருந்தது. ஆனா சுமதி கிடைக்கலப்பா."

"புரியும்படியா சொல்லு."

"அந்த விளம்பரத்தைப் பார்த்துட்டு சுமதி இருக்கிற இடம் எதுன்னு தகவல் கொடுத்தாங்க. அது ஒரு ஆஸ்பத்திரி. அங்கே போய்ப் பார்த்தா சுமதி மாதிரியே ஒரு நர்ஸ் பொண்ணு இருக்கா. அவள் பேர் மைதிலி."

MITHRAVINTHA

எதிர்முனை பாண்டித்துரையிடம் சில விநாடிகளுக்கு மௌனம் நிலவியது. அதற்குப் பின் வார்த்தைகள் ஜனித்தன.

"கமலம் மாதிரியே இன்னொரு பெண்ணா?"

"ஆமாம்ப்பா."

"அவ சாயலில் இருக்காளா இல்லை, அவளைப் போலவே இருக்காளா?"

"அச்சு அசலா கமலத்தைப் போலவே இருக்கா அந்த மைதிலி. நிறம் உடை மட்டும்தான் ரெண்டுபேர்க்கும் வித்தியாசம்."

"அந்தப் பொண்ணுகிட்டே நீ பேசினியா?"

"பேசினேன்."

"என்ன சொன்னா?"

"கமலமின்னு நினைச்சிட்டுப் பேச ஆரம்பிச்சேன். கோபத்தில் அவ கத்திட்டா."

"இனிப் நான் ஒன்னு சொன்னா கேப்பியா?"

"சொல்லுங்கப்பா?"

"ஒரே மாதிரி இரண்டு பேர் இருப்பாங்கன்றதை என்னால நம்ப முடியலை. கிட்டத்தட்ட ஒரே மாதிரி உருவம் இருக்க வாய்ப்பு உண்டு. அப்பவும் பேச்சு முறை வித்தியாசப்படும். குரலில் வித்தியாசம் தட்டலாம். இப்படி உருவ ஒற்றுமையை மீறின வித்தியாசங்கள் எவ்வளவோ இருக்கும். எல்லாமே பொருந்தி வர்றதுன்னா அது கதையிலும் சினிமாவிலும் மட்டும்தான் சாத்தியம்."

"அப்பா நீங்க என்ன சொல்றீங்க?"

"அச்சு அசலா அப்படியே இருந்தாள்னா நீ பார்த்தது கமலம்தான்."



"ஆனா அவளோட டாக்டர் இவ நீங்க தேடி வந்த பொண்ணு இல்லை. இவ பேர் மைதிலி. இவளை எனக்கு அஞ்சு வருஷங்களுக்கு மேலாகத் தெரியும்னு சொன்னாரே."

"டாக்டரோட உதவியோடு உன்கிட்டே ஒரு நாடகம் ஆடறா... அப்படித்தான் எனக்குத் தோணுது."

"ஏன் என்கிட்டே அவ நாடகமாடணும்?"

"எனக்கென்ன தெரியும்? உனக்கும் அவளுக்கும் இடையில் என்ன பிரச்சனையோ? அல்லது உன்னைவிட வசதியான ஒரு இடம் அவளுக்குக் கிடைச்சிருக்கோ என்னவோ?"

"அப்பா..."

"என்கிட்டே கத்தி என்ன பிரயோஜனம்? உன்னைக் கண்டுக்காம போன ஒருத்திக்காக நீ உன்னை வீணாக்கிக்காதே. ரத்னவேல் நேத்திக்குக் கூட அவசரப்படுத்தினார். என்ன பதில் சொல்ல மாட்டேங்கிறேன்னு கேட்டார். உன்னோட வார்த்தைக்காகத்தான் காத்திருக்கேன். உன்னை நீ சந்தோஷப்படுத்திக்க முடியாதபட்சத்தில் ரத்னவேலோட பொண்ணைக் கல்யாணம் பண்ணி உன்னைப் பெத்து வளர்த்து ஆளாக்கின அப்பா மனசையாவது சந்தோஷப்படுத்தி வைக்கலாமே?"

"அப்பா இன்னும் ஒரே நாள் எனக்கு டைம் குடுங்கப்பா."

"எதுக்காக?"

"மறுபடியும் அவளைப் போய் நான் சந்திக்கறேன்."

"சந்திக்க?"

"கடைசியா ஒரு முறை அவகிட்டே பேசிப் பார்க்கிறேன்."

MITHRAVINTHA

"இங்கே நாளைக்கு ராத்திரி நீ ஒரு நல்ல முடிவோட சென்னையில் இருக்கணும்."

"சரிப்பா."

ரிசிவரை வைத்தான் தீலீப்.

# 15

ஹாஸ்பிட்டலின் டாக்டர்ஸ் க்வார்ட்டர்ஸ்.

அவள் சற்றே கோபமான பார்வையில் தீலீபைப் பார்த்தாள்.

"மிஸ்டர்... இட் ஈஸ் டூ மச். க்வார்ட்டர்ஸ் வரைக்கும் வந்து தனியா இருக்கிற ஒரு பொண்ணுகிட்டே தொந்தரவு பண்றது உங்களை மாதிரி நபருக்கு அழகில்லை."

"சுமதி நான் சொல்றதைக் கேளு."

"நான் வைதேகி..."

"அப்படின்னு சொல்லி என்னை ஏமாத்தறதா நினைச்சிட்டு உன்னை நீயே ஏமாத்திக்கிறே."

"நீங்க யாரையோ நினைச்சிட்டு என்கிட்ட வந்து என்னென்னவோ உளறி கொட்டிட்டு இருக்கீங்க."

"நீ நேத்து காலைல நான் அப்பா பேசினார். நீ என்கிட்ட நடிக்கிறேன்னு அவர் சொல்றார். எதுக்காக இந்த நடிப்பு? என்னை அவமானப்படுத்தற அளவுக்கு நான் உனக்கு துரோகம் பண்ணிட்டேன்? அதைத் தெரிஞ்சிட்டாவது என்னோட மனசுக்குக் கொஞ்சம் நிம்மதியா இருக்கும்."



"இங்கே பாருங்க. உங்களுக்குத் தெரிஞ்ச பொண்ணோட ஜாடையில் இருக்கேன்கிற ஒரே காரணத்துக்காக என்னைத் தொந்தரவு பண்றது சரியில்லை."

"சுமதி... அப்பா எனக்கு டெட்லைன் குடுத்திருக்கார். நாளைக்கு ராத்திரிக்குள்ள நான் முடிவைச் சொல்லணும். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேனா அல்லது அவரோட நண்பர் ரத்னவேலோட பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கணுமான்னு ரெண்டுல ஒரு முடிவை நான் சொல்லியாகணும்."

"அதுக்கு என்கிட்ட பேசி என்ன பிரயோஜனம்? சுமதிங்கறீங்களே. அந்த சுமதிகிட்டே போய்ப் பேசுங்க."

"நீதான் சுமதி."

"மிஸ்டர்... பொறுமைக்கும் எல்லை உண்டு."

"உண்மையில் நீதான் என்னோட பொறுமையை சோதிச்சிட்டிருக்கே சுமதி."

அவள் கையைக் கூப்பினாள்.

"தயவுசெய்து நீங்க இந்த க்வார்ட்டர்ஸை விட்டு நான் கெட் அவுட் சொல்றதுக்கு முன்னால எழுந்திருச்சுப் போறீங்களா? பார்க்க டீசண்ட்டா இருக்கறதால இவ்வளவு நேரம் பொறுமையா உட்கார்ந்திருக்கேன். இல்லைன்னா போன் இருக்கு. போலீசுக்கு போன் பண்ணினா உங்களை வாசப்படி தள்ளிட்டுத்தான் மறு கேள்வி கேப்பாங்க. இப்போ இருக்கிற டென்ஷன்ல... பெண்களுக்கு தனி மரியாதை தர்றாங்க. பெண்கள்கிட்டே யாராவது வாலாட்டறாங்கன்னு தெரிஞ்சா சொத்தியா கவனிச்சி அனுப்பிடுவாங்க. அந்த மாதிரி ஒரு ட்ரீட்மெண்ட்டை உங்களுக்குத் தர வேண்டாம்னு ஒரு நல்லெண்ணத்துல நான் நினைக்கிறேன்."

MITHRAVINTHA

[illegible]

"ஹலோ... டாக்டர் சூர்யப்ரகாஷ் இருக்காரா?"

"நோக்கு."

"நான் கமலி."



[illegible]

"ஏன் நம்பிட்டாரா?"

"பாதிநம்பிக்கையும் பாதி அவநம்பிக்கையுமா திரும்பிப் போறார். ஆனா வேற ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிற முடிவோடதான் இங்கிருந்து போறார்."

"கமலி... நீங்க செஞ்சது மிகப் பெரிய தியாகம். இந்தத் தியாகம் தேவைதானான்னு இந்த நிமிஷம்கூட நீங்க மறுபரிசீலனை செய்யலாம்."

"மறுபரிசீலனைக்கு பேச்சுக்கே இடமில்லை."

"இனிப்பை நினைச்சா பாவமா [illegible]



MITHRAVINTHA

[illegible]



[illegible]

"கவனமா இருங்க அதே சமயத்தில் பயப்படாம இருங்க சுபமதி."

"தாட்ஸ் சுபமதி...மைதிலி."

"ஓக்கே மைதிலி."

சிரித்துக் கொண்டே— சூர்யப்ரகாஷ் டெலிபோன் இணைப்பைத் துண்டித்துக் கொண்டான்.

அதே வினாடி—பின்பக்கம்...

கைதட்டல் சப்தம் கேட்டது.

ரிசீவரை வைத்து விட்டு அவள் திரும்பிப் பார்க்க— சேதுவும் நந்தாவும் நின்றிருந்தார்கள்.

"உன்னோட நடிப்பு ரொம்பப் பிரமாதம் சுபமதி... உனக்கு செவாலியே விருது கொடுக்கலாமா... இல்லை ஆஸ்கர் விருது தரலாமான்னு புரியாம யோசிச்சிட்டிருக்கோம்."

"..."

"என்ன பேசாம நிக்கறே? உன்கிட்டே பேசிப் பார்த்து நிஜங்களைத் தெரிஞ்சிக்கலாம்ன்னு நானும் இவரும் வந்தோம். பரவாயில்லை...பேசாமலே நீ மைதிலி இல்லை சுபமதிதான்கற உண்மையைத் தெரிஞ்சிக்கிட்டோம்."

"ஏ...எதுக்காக இங்கே வந்திருக்கீங்க?"

"உன்னைப் பார்க்கத்தான்."

"ஏ... என்னை எதுக்காகப் பார்க்கணும்?"

சேது கோட்டை சற்றே உயர்த்தி புறங்கை காயத்தைக் காண்பித்த படியே சிரித்தார்.

"இத அவ்வளவு சுலபத்தில் மறக்கக் கூடியதா சுபமதி...? இருந்தாலும் இதையெல்லாம் நான் மறந்துட்



டேன். இப்போ உன் மேல எனக்கு துளி கூட கோபம் கிடையாது. நீ ஏன் நிஷிகிட்டே இருந்து உன்னை மறைச்சிக்கறேன்னு நான் காரணம் கேக்கவும் போறதில்லை. உன்னை ஃபோர்ஸ் பண்ண வேண்டியிருக்குமோன்னு கவலைப்பட்டேன். ஆனா ஃபோர்ஸ் பண்ணத் தேவையில்லாம நீயே எனக்கு ஒரு சுலபமான வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கே."

சுபமதி அவரைக் கேள்விக்குறிப் பார்வை பார்க்க— அவர் சிரித்தார்.

"நந்தாவைக் கேட்டுப் பாரு. நான் ஆசைப்பட்ட எதையும் அடையாம விட்டதில்லை. நீ மட்டும் எப்படி விதி விலக்கா இருக்கலாம்? அதான் டெல்லி வரைக்கும் துரத்திட்டு வந்துட்டோம். நான் அதிகம் ஆசைப்பட மாட்டேன். ஒரே ஒரு தடவை நீ ஒத்துழைச்சாப் போதும்."

"டேய்..."

"ப்ச்... ஆவேசமெல்லாம் வேண்டாம். அந்த மாதிரி உன்னோட ஆசிட் பாச்சா ரெண்டாவது முறை பலிக்காது. நான் உஷார் ஆயிட்டேனே."

சுபமதி அவரைப் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

"என்னை விட்டுடுங்க ப்ளீஸ்."

"என்னோட ஒருமுறை கட்டில்ல படு...ஆயுசுக்கும் உன்னை விட்டுடறேன்."

சுபமதி அதிர்ந்து போய் நிற்க—சேது தொடர்ந்தார்.

"இல்லைன்னா நிஷிகிட்டே உன்னோட நாடகத்தைப் பத்தி போட்டுக் கொடுத்துடுவேன். அவனை அனுப்பி வெச்சுட்டு போன்ல எங்கிட்டேயோ நீ குழைஞ்சேன்னு சொன்னா நிஷி எப்படிக் கொதிக்கப் போறான்."

MITHRAVINTHA

"கலியுக சாபம் பலிக்காதே சுமதி...நந்தா."

"ஸாரி—"

"இவகிட்டே நாம தங்கியிருக்கிற ஹோட்டல் பேரையும் ரூம் நெம்பரையும் எழுதிக் கொடுத்திடு."

சுமதியிடம் திரும்பினார்.

"சுமதி...வாழ்க்கையில் நான் உன்னைத் தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு நினைச்சேன்னா ஒரே ஒரு தடவை ஹோட்டலுக்கு வந்துட்டுப் போயிடு."

ஐஸ்கட்டியைப் போல உறைந்து போய் நின்றிருந்தாள் சுமதி.

## 16

பாண்டித்துரை சந்தோஷம் வழியும் முகத்தோடு திலீப்பைப் பார்த்தார்.

"திலீப்...இன்னும் கொஞ்சநேரத்தில் ரத்னவேலுவும் அவர் மகளும் இங்கே வரப்போறாங்க. எங்கே நீ சுமதி யோட ஞாபகத்தில் அவர்கிட்டே ஏடாகூடமாப் பேசி காரியத்தைக் கெடுத்துடுவியோன்னு பயப்பட்டேன்."

"நான் மனசில நினைச்சவளைக் கல்யாணம் பண்ணிக்க வழியில்லைன்னு ஆயிடுச்சு. அதுக்காக தாடி வளர்த்துகிட்டு வாழ்க்கையை வீணாக்கிக்கிறதை விட உங்க அறிவுரைப்படி உங்க நண்பரோட பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறதுதான் சரின்னு பட்டது."

"குட் டெசிஷன்."



அவர் அவனைப் பாராட்டினபோது—போர்டிகோவில் கார் சத்தம் கேட்டது.

ரத்னவேல் மற்றும் அவருடைய மகள் தாரிகா ஆகியோர் உள்ளே பிரவேசித்தார்கள்.

தாரிகா நல்ல உயரத்தோடு— டென்னிஸ் வீராங்கனை மோனிகா செலஸை ஞாபகப்படுத்தினாள். மேக்கப்பில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. அந்த எளிமையே அவளுடைய அழகை ஏற்றிக் காட்டியது.

ரத்னவேல் திலீப்பைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"மாப்பிள்ளை...உங்களைப் பார்க்கவே முடியலையே".

பாண்டித்துரை குறுக்கிட்டு அவனுக்காக பதில் சொன்னார்.

"அவன் ஒரு வாரமா டெல்லிக்கு போயிருந்தான்."

"அஃபிஷியலா?"

"ஆமா. நம்ம ஃபவுண்ட்ரி டிவிஷன்க்கு ஒரு காஸ்ட்டிங் ஆர்டரை நெகோஷியேட் பண்ணி வாங்கிட்டு வர்றதுக்காகப் போயிருந்தான்."

திலீப் ஏதாவது உளறிக் கொட்டும் முன்பாக பாண்டித்துரையே ஜாக்கிரதையாகப் பொய் சொல்லி வைத்தார்.

"என்ன மாப்பிள்ளையைப் பேச விடாம அவருக்கும் சேர்த்து நீங்களே பதில் சொல்லிட்டிருக்கீங்க? மாப்பிள்ளை நீங்க ஒண்ணும் பிடி கொடுக்க மாட்டீங்கறீங்கன்னு உங்கப்பா சொன்னார். நம்ம கிட்டே அப்படித்தான் இருப்பாங்க...நேரா பொண்ணையே கூட்டிட்டு வர்றேன். அவங்க ரெண்டு பேரும் பேசி முடிவு பண்ணட்டும்ன்னு நான் சொன்னேன்."

தாரிகா புன்னகைத்தாள்.

MITHRAVINTHA

"அப்பா...மானத்தை வாங்காதீங்க."

"இதிலென்னம்மா இருக்கு...கல்யாண விஷயமா பெத்தவங்க பேச்சு வார்த்தை நடத்தற காலமெல்லாம் மலையேறிப் போய் ரொம்ப நாளாச்சே. நடக்கிற எதார்த்தத்தைத்தானே சொன்னேன். மாப்பிள்ளை, நான் ஏன் உங்களையே குறிவெக்கறேன்னு உங்களுக்குத் தோணலாம். அதுக்கு ஒரே காரணம், எனக்கு உங்க அப்பாவைத் தெரிஞ்ச அளவுக்கு சின்ன வயசிலிருந்து இன்னிக்கு வரைக்கும் உங்களையும் நல்லாத் தெரியும். என்னோட மக நாசிகா படிப்பு படிப்புன்னு அதிலேயே மூழ்கிப் போய் பிஎச்டி வரைக்கும் முடிச்சிட்டு, இப்பதான் கல்யாணத்துக்குப் பிடி கொடுத்திருக்கா. நிறையப் படிச்சிட்டதால அவளுக்குத் தகுந்த பொறுப்புள்ள, புத்திசாலித்தனம் நிறைஞ்ச எதையும் புரிஞ்சு நடந்துக்கிற மாப்பிள்ளையா தேட வேண்டியிருக்கு. பணம் காசோட நிறையப் பேர் இருக்காங்க. ஆனா இவ ஃபெமினிஸம், சாவனிஸம்னு பேசி நாலே நாள்ல டைவோர்ஸ் வேணும்னு கேப்பா."

"அப்பா."

"நீ சும்மா இரும்மா. எனக்கும் பாண்டித்துரைக்கும் இடையில் ஃபார்மாலிட்டீஸ் எதுவுமே இல்லை. நாங்க இப்படித்தான் ஓப்பனா பேசிப்போம். அவன் எதுவும் என்னைத் தப்பா நினைச்சிக்க மாட்டான்... மாப்பிள்ளை நீங்களும் தப்பா நினைக்க மாட்டீங்களே?"

திலீப் புன்னகையை அவருக்கு பதிலாகக் கொடுத்தான்.

"பெரியவங்க நாங்க தேதியை முடிவு பண்றோம். நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருங்க. ஒருத்தரையொருத்தர் பேசிப் புரிஞ்சிக்க இந்த சந்திப்பு ஒரு வாய்ப்பா இருக்கும்."

திலீப் மறுத்தலாய்த் தலையாட்டினான்.





"அவசியமில்லை அங்கிள். எங்க அப்பாவாகட்டும். நீங்களாகட்டும் இப்படிப் பேசிப் புரிஞ்சிகிட்ட பின்னாடி தான் கல்யாணம் பண்ணிகிட்டீங்களா? இல்லையே? நீங்க மேரேஜ் லைஃபை நல்லா லீட் பண்ணலையா?"

பாண்டித்துரை குறுக்கிட்டு திலீப்பிடம் சொன்னார்.

"நீ அப்படி நினைக்கலாம் திலீப். ஆனா நாசிகா உன் கூட பேச விரும்பலாம்."

அவன் சிரித்தான்.

"நோ அங்கிள். நானும் அவரோட கட்சிதான்."

"பலே...ரெண்டு பேரும் இப்பவே கூட்டணி அமைச்சிட்டீங்களே?"

"எங்கேன்னு என்னிக்குன்னு மட்டும் நீங்க முடிவு பண்ணுங்க...ஐ மீன் மேரேஜ்."

## 17

இரண்டாவது ஷிஃப்ட்டில் வார்டிற்குள் நுழைந்தாள் சுமதி.

அட்டெண்டன்ஸில் கையெழுத்தைப் போட்டு விட்டு— சிஸ்டரிடம் சென்று ஷிஃப்ட் விபரங்களைக் கேட்டுக் கொண்டு ஹிஸ்டரி கார்டுகளை ஒரு முறை பார்வை யிட்டாள்.

அதே விநாடி—

ஞீ...

ஞீ...

ஞீ...

MITHRAVINTHA

அங்கிருந்த இன்டர்காமை அழுத்திப் பேசினாள் சுமதி.
"ஹலோ... நான் ட்யூட்டி நர்ஸ்."

சீஃப் டாக்டர் குரல் மறுமுனையில் கேட்டது—

"குட் ஆஃப்டர் நூன் டாக்டர்."

டாக்டர் கேட்டார் "வார்டில் மொத்தம் எத்தனை நர்ஸ் ட்யூட்டியில் இருக்காங்க?"

"ஆறு பேர் இருக்கோம்."

"ரெண்டு பேரை மட்டும் அங்கே இருக்கச் சொல்லிட்டு மீதி நாலு பேரும் இமீடியட்டா ஐசி வார்டுக்குப் போங்க. இட்ஸ் அன் எமர்ஜென்ஸி."

"எஸ் டாக்டர்."

ரிஸீவரைச் சாத்திவிட்டு மற்ற நர்ஸ்களிடம் உடனடியாய் விபரத்தைச் சொன்னாள் சுமதி.

அங்கிருந்து அவள் உட்பட நான்கு பேர் ஐசி வார்டுக்கு விரைந்தார்கள்.

அங்கே ஏராளமாய்ப் பரபரப்பு

மற்ற வார்டுகளிலிருந்து நர்ஸ்கள், டாக்டர்கள், ஆர்டர்லிகள் எனக் குவிந்திருந்தார்கள்.

ஆம்புலன்ஸ்கள் அலறிக் கொண்டிருக்க— ஸ்ட்ரெச்சர்களில் பேஷண்ட்களும், சடலங்களுமாய்.. இறங்கிக் கொண்டிருந்தன.

"என்னாச்சு?"

எதிரிலே அங்கே நின்றிருந்த ஆஸ்பத்திரி சிப்பந்தியிடம் சுமதி விசாரித்தாள்.

"சிக் ரோட்டுக்குப் பக்கத்தில் பெரிய ஆக்ஸிடெண்ட். ஒரு பஸ் ப்ரேக் டவுன் ஆகி தறிகெட்டு ஓடினதில்.. ஸ்பாட்



டிலேயே செத்துப் போனவங்க ரெண்டு பேர்... பல பேருக்கு படுகாயம். ஒரு வேனில் இருந்த ஆட்கள் எல்லாரும் விபத்தில் சிக்கிட்டாங்க."

"சிஸ்டர் கொஞ்சம் ஒரு கை பிடிங்க."

குரல் கேட்டதும் அந்த ஸ்ட்ரெச்சருக்குக் கையைக் கொடுத்துத் தாங்கினாள் சுமதி.

"டாக்டரிடம் போறதுக்குள்ளே விதியைப் பாருங்க."

போர்த்தியிருந்த துணி விலக— ஸ்ட்ரெச்சரில் இருந்த உடம்பை அவளால் அடையாளம் காண முடிந்தது.

சேது.

அதைத் தொடர்ந்து—நந்தா.

## 18

கல்யாண மண்டபம் உற்சாகத்தின் பிடியில் இருந்தது.

தாரிகா வெட்கப்பூச்சுடன் மணவறையில் அமர்ந்திருக்க— அருகில் தீலீப் உட்கார்ந்திருந்தான்.

இருவர் பெயரையும் ஜிகினாவில் மினுமினுக்கக் கொண்டு பின்புறத் திரை இறக்கிக் கட்டப்பட்டிருந்தது.

பாண்டித்துரையும், ரத்னவேலும் மண்டப நுழைவாயிலில் நின்று ஒவ்வொருவரையும் அக்கறையாய் வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பட்டு வேஷ்டி நபர் வேகமாய் அவர்களிடம் நெருங்கி வந்தார்.

MITHRAVINTHA

"வாசா... முகூர்த்த நேரம் நெருங்கிடுச்சு. உங்களை மணவறைக்கு கூப்பிட்டாங்க. நீங்க ரெண்டுபேரும் அட்சதை போட்டு ஆசீர்வாதம் பண்ணணும்."

அவர்கள் இருவரும் மணவறையை நெருங்கினார்கள்.

புரோகிதர் அவர்களை வைத்துச் செய்ய வேண்டிய சடங்குகளை நிறைவேற்ற ஆரம்பிக்க— ரத்னவேல் அந்த நிலையிலும் தாரிகாவைப் பார்த்து வேடிக்கை பேசினார்.

"தாரிகா பொண்ணை மட்டுமா கொஞ்ச நேரம் வெக்கப்படுறே... இல்லைன்னா உன்னை வளர்த்த என்னைத்தான் குறை சொல்வாங்க."

அவள் வியப்புக் கலந்த உதடுகளால் புன்னகைத்தாள்.

தாலிக்கொடியும், மஞ்சளும் மண்டபத்தைச் சுற்றிக் கொண்டு திரும்ப மணவறைக்கு வந்து சேர்ந்தது.

"கெட்டி மேளம்" என்றார் புரோகிதர்.

திலீப்பின் கையில் தாலியைக் கொடுத்தார்.

அவன் தாரிகாவின் கழுத்தில் அதைக் கட்டுவதற்காகத் திரும்புமுன் அது நடந்தது.

தாரிகா சட்டென்று எழுந்து விட்டாள்.

அவளுடைய தோழிகளால் அழைத்து வரப்பட்ட சுமதி விநாடிகள் அங்கே உட்கார வைக்கப்பட்டாள்.

திலீப் சந்தோஷ அதிர்ச்சியில் திக்குமுக்காட தாரிகா அவனைப் பார்த்து கண்சிமிட்டினாள்.

"ம்... தாலியைக் கட்டுங்க. மாப்பிள்ளை ஸார்."

எல்லோரும் திகைத்து நின்றுகொண்டிருக்கும்போதே திலீப் சுமதியின் கழுத்தில் தாலியைக் கட்டி மளமளவென்று மூன்று முடிச்சுக்களைப் போட்டான்.



## 19

கல்யாண மண்டபம் முழுவதும் பரபரப்பில் விழுந்த பேச்சொலிகளால் சலசலக்க ஆரம்பிக்க ரத்னவேல் மகளை மலைத்துப் போய் தாரிகாவை ஏறிட்டார்.

"என்னம்மா! இப்படியொரு காரியத்தைப் பண்ணிட்டே?"

தாரிகா புன்னகைத்தாள்.

"அப்பா! உங்க பொண்ணு எதைப் பண்ணினாலும் அது சரியா இருக்கும். அதுல நியாயம் இருக்கும்."

பக்கத்தில் நின்றிருந்த பாண்டித்துரை தன் பங்குக்குப் படபடத்தார்.

"நீ பண்ணினது கொஞ்சம் கூட சரியில்லேம்மா. உன் கழுத்துல விழ வேண்டிய தாலி அது."

"அப்படி அந்த தாலி என் கழுத்தில விழுந்திருந்தா நீங்க சந்தோஷப்பட்டிருப்பீங்க. எங்கப்பா சந்தோஷப் பட்டிருப்பார்-ஆனா திலீப் சந்தோஷப்பட்டிருக்க மாட்டார்."

ரத்னவேல் முகம் மாறியது.

"நீ என்னம்மா சொல்றே?"

"அப்பா உங்களுக்கு விஷயம் தெரியாது. திலீப்பும் சுமதியும் ஒருத்தர்க்கொருத்தர் உயிர்க்கு உயிராய் காதலிச்சிட்டிருந்தாங்க..."

"என்னது நிஜமாவா?"

"ம்...அவங்க காதல் ஆழமானது...அந்த ஆழமான காதல்தான் அவங்க பிரிவுக்கும் காரணமாயிடுச்சு."

MITHRAVINTHA

"நீ என்னம்மா சொல்றே?"

தாரிகா எல்லோரையும் ஒரு தடவை தீர்க்கமாய் பார்த்துவிட்டு பேச்சை ஆரம்பித்தாள்.

"சுமதி அவளோட அண்ணன் அண்ணியிட்ட கல்யாணத்துக்காக சம்மதம் வாங்கிட்டு வரேன்னு டெல்லிக்கு போனபோது துரதிர்ஷ்டவசமா அவங்க ரெண்டுபேரும் உயிரோடு இல்லை. அதுக்கப்புறம் வேலை தேடிகிட்டு சுமதி மெட்ராஸ் வந்திருக்கா. திலீப்பைப் பார்த்து விஷயத்தை சொல்றதுக்காக அவரோட வீட்டுக்கே போயிருக்கா. அப்படி போன சமயத்துல திலீப்பின் அப்பாவும் திலீப்பும் பேசிட்டிருந்ததை சுமதி எதேச்சையாய் கேட்டுட்டா. அந்த சம்பாஷணைதான் அவளோட மனசை மாத்திடுச்சு."

"திலீப்பும் பாண்டித்துரையும் அப்படி என்ன பேசிட்டாங்க?"

தாரிகா சில விநாடிகள் தயங்கிவிட்டு பின் மீண்டும் தொடர்ந்தாள். "அங்கிள் திலீப்கிட்ட பேசிட்டிருந்ததை அப்படியே சொல்றேன்! எக்ஸ்போர்ட் பிஸினஸில் பெரிய பிளவு ஏற்பட்டு நம்ம கம்பெனி இப்போ பெரிய நஷ்டத்தை நோக்கி போய்கிட்டு இருக்கு. இன்னும் ஆறுமாசம்தான் கம்பெனி தாக்கு பிடிக்கும்.

அதுக்குள்ள நாம அந்த சரிவில் இருந்து மீண்டாகணும். இந்த இக்கட்டான நிலைமையில் என்னோட ஃப்ரெண்ட் ரத்னவேல் கைகொடுக்க முன் வந்திருக்கார். தன் பொண்ணோட பேர்ல சொத்து முழுவதையும் எழுதி வெச்சுட்டு உன்னையும் வீக் பார்ட்னரா போட்டுக்க சம்மதம் கொடுத்திருக்கார். நான் உன்னோட காதலுக்கு எதிரி கிடையாது.

ஆனா இந்த எதிர்பாராத நஷ்டத்தை தவிர்க்கணும்னா நீ புத்திசாலித்தனமா முடிவு எடுக்கணும்.



இப்படி பாண்டித்துரை அங்கிள் சொன்னதும் திலீப் உடனடியா மறுத்துட்டார். கார், பங்களா, கம்பெனியோட லாபம் நஷ்டம் இதைப் பத்தியெல்லாம் எனக்கு கவலையில்லை. பணத்துக்காக காதலை காவு கொடுத்தா அதைவிட கீழ்த்தரமான செயல் வேற எதுவும் கிடையாது. சராசரி வாழ்க்கையை நடத்தற அளவுக்கு வருமானத்தோட ஒரு வேலையைத் தேடிகிட்டு பிழைக்கிற அளவுக்கு படிப்பும் திறமையும் என்கிட்ட இருக்கு. சுமதிக்கு நான் துரோகம் பண்ண மாட்டேன்னு திலீப் சொல்லிட்டார்."

சற்று இடைவெளிவிட்டு மீண்டும் தொடர்ந்தாள் தாரிகா.

"அப்பாவுக்கும் மகனுக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டுத்தான் சுமதி திலீப்புக்கு நன்மை செய்யறதா நினைச்சு யார்கிட்டேயும் சொல்லிக்காம கொள்ளாமே மறுபடியும் டெல்லிக்கு போயிட்டா. அந்தஸ்தைக் காட்டி காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்காத அப்பா, பணத்தை விட காதலை பெரிசா நினைக்கிற மகன். இவங்க ரெண்டு பேரும் மிகப்பெரிய ஒரு நஷ்டத்தை சந்திக்கிறதுக்கு தான் காரணமாயிடக் கூடாதுன்னு சுமதி முடிவெடுத்தா. அட்வான்ஸ் வாங்கி விட்ட கம்பெனிகளுக்கெல்லாம் பணத்தை திருப்பி அனுப்பிட்டு சென்னையை விட்டு கிளம்பினா. போறதுக்கு முன்னாடி அவளுக்கு ரவீனின் பழக்கமான டாக்டர் சூர்யப்ரகாஷ்கிட்டே தான் டெல்லியில் செட்டிலாக உதவி கேட்டிருக்கா. அவர்தான் மதர் தெரசா பாலி க்ளினிக்கில் சுமதிக்கு நர்ஸ் வேலை வாங்கிக் கொடுத்தார்."

திலீப் அப்போது குறுக்கிட்டு கேட்டான்.

"இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும் தாரிகா?"

MITHRAVINTHA

[illegible]

[illegible]

ரத்னவேல் இடைமறித்தார்.

"அதை நீ ஆரம்பத்திலேயே என்கிட்ட சொல்லியிருக்கலாமே [illegible]?"

"மொதல்லேயே சொல்லியிருந்தா உங்க ரீயாக்ஷனும் [illegible]"

"என்ன நிபந்தனை?"

ரத்னவேல் குழப்ப முகத்தோடு கேட்டார்.



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

"தாங்க்யூப்பா."

★



MITHRAVINTHA